977

தொகுதி 8.] 1929ளு அக்டோபர்மீ 1உ [ப

மனமோகினி.

ஆசிரியோர்
ஆரணி. குப்புசாமிமுதலியார்

...ரகர்த்தா
...மி முதலியார்,
...யம், சென்னை.

...THE REGISTRAR OF ...
16NO...
...MADRAS...
3L
N29.8.9
186538

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே
சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட
க் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த
பாதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை
922ஆ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம்.
இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்க
ளுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு
முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான
ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட
"அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்
மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" 'கற்பகச்
சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இரா
ஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது
இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி"
என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசி
யம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடி
வான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள
வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகை
கள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட
விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பி
யோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சி
கைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தா
லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்
கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

OFFICE OF THE REGIS... 16 NOV 19.. MADRAS

தான:—சரி யது போகட்டும். சங்கதியை முடிப்போம். இந்த வேலையை முடிக்க எந்த இரவு ஏற்பாடு செய்தி ருக்கிறாய்?

சார:—ஏன்! அடுத்த ஞாயிறு இரவு முடித்துவிட்டா லென்ன? ஞாயிற்றுக் கிழமைகளில் கிழவி யெப்போ தும் விருந்து நடத்துவதில்லை. முன் இரவிலேயே சய னத்திற்குச் செல்வார்கள்.

தான:—சரி அடுத்த ஞாயிறு இரவே யிருக்கட்டும். இதற்கி டையில் நான் கிழநரியைக்கண்டு சரக்கு வரப்போகிற தென்று எச்சரிக்கை செய்து வைக்கிறேன்.

சார:—"அப்படியே செய் சரியா யிரவு பன்னிரண்டுமணிக்கு" என்று தானவன் காதில் இரகசியமாய் ஏதோ கூறினன்.

அதன் பிறகு ஒருவருக் கொருவர் வந்தனம் புரிந்து கொண்டு எழுந்து அறையை விட்டு வெளிச் சென்றார்கள். நாட்டுப்புறத்தான் அப்போது மூலையில் குரட்டை விட்டுக் கொண்டே யிருந்தான்.

13-வது அத்தியாயம்.

இதே செவ்வாய்க்கிழமை மாலையில் கந்தபுரியில் நடந்த ஒரு சம்பவத்தை நாம் இங்கு கூறவேண்டியதா யிருக்கிறது.

மாலைப்போது முடிவிற்கு வருகிறது. பட்சிகளனைத்தும் சங்கீதம் பாடிக்கொண்டு தங்கள் தங்கள் கூடுகளுக்குச் செல்லத் தொடங்கின. அழகு வாய்ந்த நமது கோமளவல்லி முன் அவளும் ஜகதீசனும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்ததாய் நாம் கூறிய தோட்டத்திலுள்ள அதே ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். ஆனல் இப் போது அவள் தனியாயிருந்தாள். அவள் ஒருவித ஏக்கத்தி

186538
சென்னை-600 008

விருந்தாள். அவள் தன் காதலனைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

முன்னாள் அவள் காதலன் தான் கந்தபுரியை விட்டு சில நாட்களுக்கு வெளியிற் செல்ல வேண்டுமென்றும், அப்படி யதிக காலமாயிருந்தால் ஒரு வாரத்திற்கு அதிகப்படா தென்றும் கூறியிருந்தான். அவன் தன் எண்ணப்படி கோமளவல்லியை மணம் புரியுமுன் தன் சொந்த விவகாரங்களைக் கவனிப்பதற்காக இரத்னபுரிக்குச் செல்லவேண்டி யிருந்தது. கோமளவல்லி அவனிடம் தன் தமக்கைக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து நேரில் அவளைக் காணும்படி கூறினாள். அவனுக்கும் தான் மணம்செய்யப்போகும் கன்னிகையின் தமக்கையைக் கண்டு பேசவேண்டு மென்பதே ஆவல்.

ஜகதீசன் செவ்வாய் காலையில் கந்தபுரியை விட்டுப் புறப்பட்டதால்தான் இரத்னபுரியில் மறுநாள் யாராரைக் காண நினைத்தானோ அவர்களுக்கெல்லாம் முன்னாடி கடிதம் எழுதித் தெரிவிக்க அவனுக்கு அவகாசமிருந்தது. அதோடு தான் துரிதமாய் இரத்தினபுரியிலுள்ள தன் வேலைகளை முடித்துக்கொண்டு துரிதமாய்த் தன் காதலியிடம் செல்ல வேண்டுமென்பது அவன் பிரியம்.

மேல் கண்டபடி நமது கோமளவல்லி தனியாய்த் தோட்டத்தில் குந்திக்கொண்டிருந்தாள். அவள் மனதில் துயரமே யிருக்கிறதென்று கூறுவதற்கில்லை. ஏனெனில் அவளுக்கு மனதில் ஒரு விஷயத்தில் சோகம் இருந்தபோதிலும் மற்ற விஷயங்களில் சந்தோஷமே யிருந்தது. எவ்வாறெனின் தன் காதலன் தன்னைப் பிரிந்து இரத்னபுரிக்குச் சென்றானெனினும், "தன் தமக்கையை நேரிற் காண்பான். மேலும் அவளுடைய தற்கால நிலைமையை நேரிற் கண்டு தனக்குத் தெரிவிப்பான். அதோடு அவன் தன் காரியங்களை

முடித்துக்கொண்டு வரச் சென்ற காரணம் தன்னைத் துரிதமாய் மணம் புரிவதற்கே" என்ற இந்த யோசனைகளால் அவள் மனதில் துயரம் இருக்கிறதென்று கூறுவதற்கில்லை.

அவள் ஆழ்ந்த சிந்தனையில் அங்கு உட்கார்ந்திருந்ததால், காலம் செல்வதும் அவளுக்குப் புலப்படவில்லை. கடைசியில் அருகிலிருந்த கோயிலில் மணிபதினொன்று அடித்தது அவள் செவிகளில் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தாள். அவள் தன் அத்தை நித்திரை செய்துகொண் டிருந்தபோது தன் நம்பகமான தோழியிடம் ஒப்புவித்துவிட்டு வந்ததால் கலவரமின்றி யிருந்தாள்.

அவள் அங்கிருந்து எழுந்து வீட்டை நோக்கிச் செல்லப் புறப்பட்டாள். அச்சமயம் அருகிலிருந்த வேலிகளை யாரோ விலக்கிக்கொண்டு வருவதுபோன்ற சத்தம் கேட்டது. கோமளவல்லி திடுக்கிட்டு நின்றாள். மறுவிநாடி இரண்டு முரட்டு ஆட்கள் பாய்ந்து வந்து அவளைப் பிடித்துக்கொண்டார்கள். ஒருவன் அவள் வாயைக் கரத்தால் அழுத்திப் பிடித்துக் கொண்டான். அதனால் அவளால் கூச்சலிடச் சற்றும் முடியவில்லை. அதற்குள் மற்றவன் "பத்திரம், வாய் திறந்தாயோ உடனே உன் உயிர் போய்விடும்" என்றான். அச்சங்கதி அவள் செவிகளில் சரியாய் விழவேயில்லை. ஏனெனில் அவள் திகிலாலும் துயரத்தாலும் தன் புத்தி சபலமடைந்து சுவாதீனத்தை இழந்துவிடும் சமயத்திலிருந்தாள். அதே நிலையில் அத்துஷ்டர்கள் அவளைத் தூக்கிக்கொண்டு தோட்டத்தைக்கடந்து சமீபத்தில் இத்துஷ்டச்செயலுக்கென்று அங்கு ஆயத்தமாய்க் காத்துக்கொண்டிருக்கும் ஒரு வண்டியில் போட்டுக் கதவைத் தடால் என்று மூடிவிட்டார்கள்.

வண்டியில் இருள் சூழ்ந்திருந்தது. வண்டிக்குள் இருந்த ஒருமாது "கன்னிகையே! நீ சந்தோஷமா யிரு. பயப்படவேண்டிய காரணம் ஒன்றுமில்லை." என்றாள்.

கோமளவல்லி:—"நீ யார், ஈதென்ன சங்கதி?" என்று கனவு காண்பவள்போல் கூறினாள்.

அம்மாது அநாகரீகமான முரட்டுத்தனத்தோடு "கேள்விகளுக்கு நான் விடையளிக்கக் கூடாது. உன்னை யாரும் கொன்றுவிடப்போகிறதில்லை; ஆகையால் அதைப்பற்றி நீயொன்றும் பயப்படவேண்டியதில்லை" யென்றாள்.

கோமளவல்லி தன் தலையைப் பிடித்துக்கொண்டு தன் கலவரமான புத்தியைச் சரிப்படுத்த முயன்றாள். அவள் உட்கார்ந்திருக்கும் வண்டியில் இருள் சூழ்ந்திருக்கிறது. கூட இருப்பதோ முன்பின் அறியாத அநாகரீகமான ஒரு முரட்டுக்கிழவி யென்று தெரிகிறது. வண்டியோ வேகமாய்ப் போய்க்கொண் டிருக்கிறது. வண்டி எங்கே போகிறது? தன் விதி கடைசியில் எப்படி முடியும்? இது ஏதோ தப்பிதத்தால் இன்னொருவர்க்காக நம்மைப் பிடித்துப்போகிறதா யிருக்கிறது என்றே அவள் அச்சமயம் கருதினாள். மற்றபடி தனக்கு இப்படிப்பட்ட தீங்கு செய்யவேண்டு மென்ற எண்ணம் உடையவர்கள் யார் இருக்கிறார்கள்? அவள் மனதில் அப்படி யாராவது இருப்பதாய்த் தோன்றவில்லை. கடைசியில் அவள் "நீங்கள் தப்பிதமான ஆளைப் பிடித்துக் கொண்டு போகிறீர்கள். நீங்கள் யாரைப் பிடித்துப் போக வந்தீர்கள் அந்த உண்மையைக் கூறு!" என்றாள்.

அம்மாது முரட்டுச்சொற்களாலேயே "என் பிள்ளைகள் இந்த வேலையை நடத்தினார்கள்; அவர்கள் முட்டாள்களல்ல. எல்லாம் சரியாகவேதான் நடத்தியிருப்பார்கள். உன் பெயர்

கோமளவல்லியா யிருந்தால் எல்லாம் சரிதான். ஒரு தவறும் நேரிடவில்லை" என்றாள்.

இதைக்கேட்டதே கோமளம் மனமுடைந்து அலறிவிட்டாள். தான் ஒரு துணையுமின்றி ஆபத்தில் சிக்கிக்கொண்டதைநினைத்ததே "அய்யோகடவுளே! என்கதி என்னாகும்?" என்று பிரலாபித்தாள். மனம் பைத்தியம் கொண்டுவிடும்போலிருந்தது. பல சிந்தனைகள் அவள் மனதில் ஏக காலத்தி லுதித்தன.

"அய்யோ நமது அத்தை கதி யென்னாகுமோ-அவள் சுபாவமறிந்து இச்சமயத்தில் அவளை யாதரிப்பவர்கள் ஒருவருமில்லையே. நாம் காணமற்போனதைப்பற்றி வேலைக்காரப் பெண் என்ன நினைப்பாளோ. அவள் மனமும் கலவரமடைந்து அத்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளில் தவறிவிடுவாளே. இதோடு நமது காதலன் இரத்னபுரியிலிருந்து திரும்பி வந்ததும் ஆவலோடு நம்மைக் காண வருவாரே. நாம் காணமற் போயிருப்பதைப்பற்றி யென்ன நினைப்பார்? என்ன சந்தேகப்படுவாரோ? இதற்கிடையில் நாம் அதிககாலம் திரும்பி வராவிட்டால் அவர் எழுதும் கடிதங்களுக்கு நமது பதில் ஒன்றேனும் செல்லாதிருந்தால் அதைப்பற்றி என்னவென்று நினைப்பாரோ? என்ன சந்தேகங்கொள்வாரோ?" என்று இவ்வாறெல்லாம் எண்ணி மனம் கலங்கித் திகைப்புற்றாள்.

வண்டி சுமார் இருபது நிமிடம் ஓடியபின் செப்பனிட்ட வீதியில் நுழைகிறதென்று கோமளம் சத்தத்தால் அறிந்துகொண்டாள். கந்தபுரியைச்சுற்றிக்கொண்டு தூரத்திலுள்ளபாகத்தில் நுழைகிறதென்று எண்ணினாள். ஏனெனில் அவளுடைய தனி வீட்டிலிருந்து புறப்பட்டதே சமீபத்திலுள்ள நேர்பாதை வழியில் நகருக்குள் பிரவேசித்திருந்தால் ஐந்து நிமிடநேரம் கூடச் செல்லாது.

பிறகு வண்டி ஒருவிடத்தில் நின்றதும் மூதாட்டி "குழந்தாய் இப்போது நான் உனக்கு முகமூடி யணிந்துவிடவேண்டும்" என்று கூறிக்கொண்டே தன் கரத்தால் ஒரு தடித்த கருப்பு முகமூடியை யவளுக்கணிந்தாள். அவளுடைய கரங்கள் தன்மேற் பட்டபோது கோமளவல்லிக்கு ஒரு காட்டு மிருகத்தின் நகமுடைய கரங்கள் பட்டதுபோல் திகிலுண்டாயிற்று. அதோடு "இது எந்தவிடமோ. நாம் எப்படிப் பட்ட துஷ்டரிடம் சிக்கிக்கொண்டோமோ, நமது முடிவு என்னுகுமோ? மறுபடி இங்கிருந்து திரும்புவோமோ திரும்ப மாட்டோமோ" என்று பலவிதக் குழப்பங்களும் திகிலும் அவள் மனதில் ஏககாலத்தில் உண்டாகவே திகில் பொறுக்க முடியாது கோவென்றலற வாய்திறந்தாள். ஆயினும் அவள் வாயினின்றும் சத்தம் வெளிவருவதற்குள் அடியோடு ஸ்மாணை நீங்கி மூர்ச்சையாய் வண்டியில் விழுந்துவிட்டாள்.

பிறகு அவள் ஸ்மாணை வந்து கண்களை விழித்தபோது தான் ஒரு அறையில் ஒரு மஞ்சத்தின் மேல் படுத்துக்கொண்டு இருக்கக் கண்டாள். முதலில் அவளுக்கு எல்லாம் கலவரமாகவே யிருந்தது. மறுவினுடி தன் எதிரில் யாரோ ஒரு மாது நிற்பதைக் கண்டாள்; நடந்த சங்கதிகள் கனவுபோல் நினைவிற்கு வந்தன. உடனே "நான் எங்கே யிருக்கிறேன்?" என்ருள். எதிரிலுள்ள மாது அதற்கு விடையளிப்பதற்குள் கோமளம் அறையின் நாற்புறங்களையும் நோக்கினுள்.

அந்த அறை சிறியதாயிருந்தாலும் நன்ருய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு மெழுகு வர்த்தி மேஜைமேல் எரிந்துகொண்டிருந்தது; சுவரோரங்களில் அழகிய படுதாக்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. தன் மஞ்சத்தைச் சுற்றிலும்

கூட தடித்த அழகிய பட்டுத் திரைச்சீலை விடப்பட் டிருந்தது. ஒரு பக்கம் மட்டும் காற்று தாராளமாய் வருவதற்காக திரை தூக்கி விடப்பட் டிருந்தது. தான் படுத்திருக்கும் இடத்திற்கு நேர் எதிர் சுவரில் தடித்த ஒரு சிறு வட்டமான திரை விடப்பட் டிருந்தது. அங்கு சாளரம் இருக்கிற தென்று தெரிந்து கொண்டாள். இவை யாவும் கண்டு நிதானிக்கும் சமயம், இது நம் வீடல்ல வென்று அவள் மனதிற் பட்டது. தக்ஷணமே "ஓகோ! கண்டது கனவல்ல உண்மையாகவே துஷ்டர்கள் நம்மைப்பிடித்து வண்டியில் போட்டுக் கொண்டு வந்து இந்தப் புதுவிடத்தில் வைத்திருக்கிறார்கள்" என்று விளங்கியதும் திகிற்பட்டு மறுபடி "நான் எங்கேயிருக்கிறேன்?" என்று தன் எதிரில் நிற்கும் மாதை நோக்கிக் கேட்டாள்.

அம்மாது வண்டியில் கோமளத்தோடு கூட வந்த மாதைப்போல் முரட்டுத்தனமாகவும் அநாகரிகத்தன்மையாகவும் பேசாமல் சாந்தமாகவும் அன்போடும் "குழந்தாய்! நீ யிப்போது மனதை யதிகமாய்க் கலவரப்படுத்திக்கொள்ளாதே, சற்றுநேரம் அமைதியாயிரு" என்றாள்.

கோமளம்:—"சரிதான், நான் இப்போது எங்கிருக்கிறேன்? இது யார் வீடு? யாருடைய கட்டளையால் நான் இங்கு கொண்டுவரப்பட் டிருக்கிறேன்?" என்றாள்.

அம்மாது:—"நான் உன் கேள்விகளுக்குப் பதில் அளிக்கலாகாது. அப்படிச்செய்ய எனக்குக் கட்டளையில்லை. நான் கூறுவதெல்லாம் கூடி, உனக்கு எவ்விதமான தீங்காவது சம்பவிக்குமென்று அச்சங்கொள்ளாதே. அதோடு உன் வீட்டிலுள்ளவர்களைப்பற்றியும் எவ்விதக் கலவரமும் கொள்ளவேண்டா மென்பதே" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட கோமளம் "நீ பின்னால் கூறி யதன் அர்த்தமென்ன ?" என்றாள்.

அம்மாது:—"அதாவது நீ வீட்டிலிருந்து வந்துவிட்டதற் காக உன் வீட்டிலுள்ளவர்களுக்குத் தகுந்த காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நம்பகமான ஆள் மூலமாய் அங்குள்ள வேலைக்காரிக்கு கடிதம் அனுப் பப்பட் டிருக்கிறது" என்றாள்.

கோமளவல்லி மிக்க திகிலடைந்து "அய்யோ கட வுளே! அப்படியானால் நான் நீடித்த காலமா இங்கு அடைத்துவைக்கப்படப் போகிறேன் ?" என்று கண்ணீர் விட்டாள்.

அம்மாது:—"அம்மா நான் மறுபடி கூறுகிறேன். உன் கேள்விகளுக்கு விடையளிக்க எனக்கு அனுமதியில்லை. ஆனால் நீ மனக் கலவரமடையாமல் சாந்தமாய் இருக் கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்றாள்.

கோமளம்:—"அய்யோ தெய்வமே! என் கதி யென்ன ?" என்று ஓலமிட் டழத் தொடங்கினாள்.

அம்மாது பதிலுக்கு ஒன்றும் கூறவில்லை. ஏனெனில் கண்ணீர்விட் டழுதால் துக்கம் அடங்கிவிடும் என்பது அவள் கருத்து. அப்படியே சற்றுநேரம் தேம்பித் தேம்பி யழுதபின் சற்று மனோநிம்மதியும் சாந்தியும் அடைந்தாள். பிறகு மறுபடி அம்மாதைப் பல கேள்விகள் கேட்டாள். அம்மாது "அம்மா! நான் உன் தோழியைப்போல் நீ விரும் புகிறபடி செய்யவேண்டியவளே யன்றி கேள்விகளுக்குப் பதில் கூறவும், வீண்கதைகள் பேசவும் எனக்கு அதிகா மாவது அனுமதியாவது கிடையாது. உனக்கு எது வேண்டு மாயினும் கொண்டுவந்து தருகிறேன். நீ சயனித்துக்கொள்

ளப் பிரியப்பட்டால் படுக்கை தயார் செய்கிறேன். அதுவே நலமென்று நினைக்கிறேன். நீ தனியாய் இருக்கவேண்டி விரும்பினால் நான் போய்விடுகிறேன்" என்றாள். கோமளம் உடனே "நாம் தப்பித்துக்கொண்டுபோக ஏதாவது வழி யிருக்கும். முயற்சி செய்வோம்" என்ற எண்ணத்தோடு, "ஆம். நான் தனியா யிருக்கவே விரும்புகிறேன். "நீ போய் வரலாம்" என்றாள்.

அம்மாது அவள் நோக்கத்தை யொருவா றுணர்ந்து, இவள் யோசனை கைகூடுகிறதல்லவேயென்று நினைத்து தனக்குள் நகைத்துக்கொண்டே சென்றாள்.

உடனே இரண்டு கதவுகள் மூடப்பட்ட சத்தம் அவள் செவிகளில் கேட்டதும் நமக்கு அப்படித் தோன்றுகிறதோ என்னமோவென்று திகிலோடு சந்தேகப்பட்டாள். ஆனால் மறுநிமிடம் இரண்டு கதவுகளும் தாளிடப்படுவதும் பூட்டு கள் போடப்படுவதுமான சத்தம் அவள் செவிகளில் கேட் டது. உடனே பேரிடி விழுந்தது.

கோமளம் உடனே மஞ்சத்தை விட்டிறங்கி முழங்கா லிட்டு கடவுளைத் தோத்திரம் செய்யத் தொடங்கினாள்.

14 - வது அத்தியாயம்.

மேல் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுதினம் புதன்கிழமை. இப்போது நாம் கந்தபுரியைவிட்டு இரத்னபுரியில் நடக்கும் சில சம்பவங்களைக் கவனிக்கவேண்டியதா யிருக்கிறது.

சுகசிங்கம் பிரபு அன்று மிக்க அதிகாலையில் படுக்கையைவிட் டெழுந்தார். அவருடைய நம்பிக்கையான அந்தரங்க வேலைக்காரன் பிச்சிமுத்து என்பவன் அவர் முகத்தைக் கண்டதும், அவர் மனதில் ஏதோ மிக்க கவலை முண்டாயிருக்கிறதென்று அறிந்துகொண்டான். செல்வாக்குடைய செல்வவந்தரிடத்திலும், அரசர்கள், மந்திரிப்பிரதானிகள் முதலியவர்களிடத்திலும் வேலைக்காரரா யிருப்பவர்கள் மிக்க புத்திசாலிகளாயும் தந்திரவான்களாயு மிருக்க வேண்டும். இன்றேல் பெரிய ஆபத்துக்குள், பிராணபத்திலும், சிக்கிக்கொள்வார்கள்.

பிச்சிமுத்து மிக்க சூக்குமபுத்தியும் தந்திரமும் உடையவனே. ஆகையால் அவர் அந்நிலையிலிருப்பதைத் தான் அறிந்துகொள்ளாதவன் போலவே யிருந்தான். தனக்கு அந்த இரகசியத்தைக் கூறவேண்டியது அவசியமாயின் தானே கூறுவாரென்றும், அதை வெளியிடப் பிரியமில்லாவிடின் ஒருபோதும் கூறவேமாட்டாரென்றும் அவனுக்குத் தெரியும்.

பிரபுவிற்கு வயது 60 க்குமே லிருக்குமே யொழிய கம்மியா யிராதென்று முன்னமே கூறி யிருக்கிறோம். அவர் எழுந்த உடனே சரியான உடை யணிந்துகொண்டு, இரவு

முழுமையும் ஒரு கிண்ணத்தில் பன்னீரில் ஊறிக்கொண்டிருந்த பொய்ப் பற்களை யெடுத்து அணிந்துகொண்டார். பொய்ச்சிகையை யெடுத்து மாட்டிக்கொண்டார். முகத்திலுள்ள திரைகளை மறைக்கப் பசையும், மேலே பூசும் சாயத்தையும் போட்டுக்கொண்டார். நேர்த்தியான விலையுயர்ந்த உடைகளை யணிந்துகொண்டு, விலையுயர்ந்த பொற் கெடியாரம் பொற்சங்கிலிகளையும், விரல்களில் இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மோதிரங்களையும் அணிந்துகொண்டார். அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் தன் அழகு சரியாயிருக்கிறதா, தன் உருவம் வாலிபனைப்போல் தோன்றுகிறதாவென்று பார்த்துக்கொண்டு பிச்சிமுத்துவை நோக்கி "இப்போது உனக்குச் சில முக்கியமான கட்டளைகளை யிடப்போகிறேன். கவனமாய்க் கேள்" என்று கூறிவிட்டுப் பின்வருமாறு இயம்பத் தொடங்கினார்.

"இன்று நான் முதலாவது வீட்டிலேயே யிருப்பேன். இரோஜா அறையில்தான் இருப்பேன். யார் என்னைக் காணவேண்டுமென்று வந்தாலும், அவர்கள் பார்வைக்குப் பெரிய மனிதர்போல் இருந்தாலும் நாடோடிகளைப்போலிருந்தாலும், சிறியோராயிருந்தாலும் பெரியோராயிருந்தாலும், ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், யாராயிருந்தாலும் சரி, அவர்களை யுடனே நேராய் என் முன்னழைத்துவந்துவிடவேண்டும்" என்றார்.

பிச்சிமுத்து:—"அப்படியே பிரபுவே" என்றான்,

பிரபு:—"அந்த அறையில் நெகிடித்தீ யெரிக்கும் இடத்திற்குப் பக்கங்களில் உயரமாய் இரண்டு புஷ்பத்தொட்டிகள் இருக்கின்றன வல்லவா. அவை யிரண்டிலும் ஒவ்வொரு கைத்துப்பாக்கி கெட்டித்து வைக்கப்படவேண்டும்......" என்றதே,

பிச்சி முத்து திடுக்கிட்டுக் கலவரமடைந்து "பிரபுவே! கைத்துப்பாக்கிகளா வைக்கப்படவேண்டும்?" என்ருன். பிரபு அதிகாரத்தோரணையாய் "ஆம் அவை கெட்டித்து வைக்கப் படவேண்டும் என்பதை மறவாதே. ஆனல் நான் ஒருவரோ டும் சண்டையிடப்போவதில்லை. ஒருசமயம் என்னிடம் பேச வரும் ஆள் கொஞ்சம் போக்கிரியா யிருக்கக்கூடும்; ஆகை யால் முன் எச்சரிக்கையாய் இருப்பதேயன்றி வேறில்லை. அத்துப்பாக்கிகளைக் குழாய் கீழாகவும் கைப்பிடி மேலாகவும் இருக்கும்படி வைக்கவேண்டும். அதாவது கை நீட்டியதே சட்டென்று கையில் எடுத்துக்கொள்ளத்தக்க விதமா யிருக்க வேண்டும். அதோடு அவைகள் மறைபட் டிருப்பதற்காக ஒவ்வொன்றின் மேலும் ஒவ்வொரு புஷ்பச்செண்டுகளை வைத்துவை.

இது மட்டுமல்ல நான் அந்த அறையில் உட்காருவ தேனென்னில் அங்கு இரண்டு பக்கங்களில் வேலைக்காரரை யழைக்க மணியடிக்கும் இரண்டு கயறுகளிருக்கின்றன. ஒன்று வேலைக்காரர்கள் இருக்கும் அறையிலுள்ள மணியை யடிக்கும், மற்றொன்று உன் அறைக்கு வரும் வழியிலுள்ள மணியை யடிக்கும். அல்லவா?" என்ருர்.

பிச்சிமுத்து "ஆம் பிரபுக்களே!" யென்ருன்.

பிரபு:—"இப்போது நான் கூறும் விஷயங்களைக் கவனமாய்க் கேட்டுக்கொள்ள வேண்டும். யாராவது வருகிற மணி யடித்ததே நீ யந்த ஆளை யென் அறையிற் கொண்டு வந்து விட்டுவிட்டுத் துரிதமாய் உன் அறைக்குச் சென்று அங்கு சாளரத்திலிருக்கும் திரையை உடனே மேலே இழுத்துவிட வேண்டும். அதுமட்டுமல்ல அப் புறம் நீ யுன் அறையைவிட்டுச் செல்லாமல் அங்கேயே

பிருந்துகொண்டு, உன் அறையின் எதிரிலுள்ள வழியிலிருக்கும் மணியைக் கவனித்துக்கொண்டேயிருக்க வேண்டும். அந்த மணி ஒரு தரம் மட்டு மடித்ததோ, நீ யுடனே உன் அறையிலுள்ள சாளரத்தின் திரையை யிறக்கிவிடவேண்டும். தெரிகிறதா?'' என்றார்.

பிச்சிமுத்து:—"ஆகா தெரிந்துகொண்டேன் பிரபுவே'' என்ருன்.

பிரபு:—"அம் மணி ஒரு தரம்மட்டும் அடிக்காமல் இரண்டு தரம் அடித்தோ நீ யுடனே பொருபாய்ச்சலாய் நான் இருக்கும் அறைக்கு ஓடி வரவேண்டும். ஏனெனில் அப்போது உன் உதவி யங்கு அவசியமாய் வேண்டியிருக்கிறது என்று எண்ணிக் கொள்ளவேண்டும்'' என்ருர்.

பிச்சிமுத்து:—பிரபுவே! தாங்கள் கூறிய கட்டளைகளனைத்தும் திட்டமாய்த் தெரிந்து கொண்டேன். வேறு ஏதேனு முண்டோ?'' என்ருன்.

ஒரு சமயம் இத்தகைய எச்சரிக்கைகளையுடைய ஆச்சரியமான கட்டளைகளைப்பற்றிய மர்மமான விஷயத்தைப் பற்றி கொஞ்சமேனும் நமக்குப் புலம் விடுவாரென்று மிக்க ஆவலோடு மேற்கண்டவாறு கேட்டான்.

பிரபுவே "வேருென்றுமில்லை. இப்போது கூறியவற்றை மட்டும் சரியாய்க் கவனத்தில் வைத்து அவைகளின்படி ஜாக்கிரதையாய் நடந்துகொள். நான் இரோஜா அறைக்குச் செல்கிறேன். காலைப்போஜனம் எனக்கு அங்கே வட்டிக்க வேண்டும்'' என்ருர்.

பிச்சி முத்து இரகசிய சங்கதியைப் பற்றி தனக்குக் கொஞ்சமும் தெரிவிக்காததைப் பற்றி அதிருப்தி யடைந்துத் திரும்பினான்.

அவன் சென்றதே பிரபு அங்கிருந்து ஒரு அலமாரியைத் திறந்து அதில் கத்தைகத்தையாய் இருந்த நோட்டுகளில் இரண்டாயிரம் சவரன்கள் பொறுமான நோட்டுகளையெடுத்து ஒரு கட்டாய்க் கட்டித் தன் உட் சட்டையின் ஜேபியில் வைத்துக் கொண்டு கீழிறங்கும் படிக்கட்டுகளின் வழியாய் இரோஜா அறைக்குச் சென்றார். முன்னுடியே அந்த நோட்டுகளின் நம்பர்களை ஒரு புத்தகத்தில் குறித்துக் கொண்டு அப்புத்தகத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டார்.

அந்த அறை மிக்க விசாலமானது. மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்குள்ள சுவர்கள், அங்கு தொங்கவிடப்பட்டிருக்கும் திரைச் சீலைகள், மேல் தளத்திற்குப் பூசப்பட்ட சாயநிறம், மேஜைகள், நாற்காலிகள், சோபாக்கள், மற்ற ஆசனங்கள் யாவும் இரோஜா நிறமானவைகளே. இதனுற்றான் அந்த அறைக்கு இரோஜா அறையென்று பெயர் வந்தது. அந்த அறையில் பிரம்மாண்டமான நான்கு நிலைக்கண்ணாடிகள் இருந்தன.

அந்த அறையில் இரண்டு பக்கங்களில் கதவுகளிருந்தன. ஒருவழி சாதாரணமாய் யாவரும் வருவதும் போவதுமான வழி. மற்றொன்று அறையின் மற்றொரு பக்கத்திலிருப்பது இரண்டு அறைகளுக்குச் செல்கிறது. அந்த அறைகளுக்குள் வேறு எவரும் பிரவேசித்ததில்லை. அந்த அறைகளுக்குச் செல்லும் கதவின் சாவி எப்போதும் பிரபுவின் வசத்திலேயே யிருக்கும். அந்த அறையைச் சுத்தம் செய்ய

வேண்டியதாயின் பிச்சி முத்தும் வீட்டுக்காரியஸ்தியும் இருவரும் மட்டுமே அந்த அறைகளுக்குள் செல்ல அனுமதியுடையவர்கள். இந்த அறைகளிற்றான் சந்நியாசகளும் கடின கற்புடைய மாதருக்கும் கூடச் சிற்றின்ப வெறியையுண்டாக்கத்தக்க அத்தகைய படங்கள் இருப்பதாய் நாம் இக்கதையின் முன் பாகத்தில் கூறியது.

பிரபு தன் காலைப் போஜனம் முடிந்ததும் சாமான்களையெடுத்துப்போக வேலைக்காரனை யழைக்கும் மணியை யடித்தார். அவ்வேலைக்காரன் சாமான்களை யெடுத்துக்கொண்டு, காலையில் வந்த கடிதங்களை யவர் எதிரில் வைத்து விட்டுச் சென்றான்.

வேலைக்காரன் சென்றதே பிரபு வந்த கடிதங்களையொவ்வொன்றாய் எடுத்து வாசிக்கத் தொடங்கினர். அவர் முதலில் பிரித்து வாசித்த கடிதத்தில் கீழ்க்கண்ட சங்கதிகள் இருந்தன.

"செவ்வாய்க்கிழமை மாலை 17—9—14

பெரியப்பா என் கையெழுத்தைக் கண்டதே நான் மறுபடி வந்திருக்கிறேன் என்பதை யுணர்ந்து திடுக்கிட்டு விட வேண்டாம். நான் ஞாயிறு மாலை வந்தேன்; ஆனால் பூராய் மறைவிலேயே யிருக்கிறேன். காரணம் தங்களுக்குத் தெரிந்ததே. நான் நாளை பகல் 12-மணிக்குச் சரியாய்த் தங்களை வந்து காண்கிறேன். ஆகையால் தாங்கள் அச்சமயம் வீட்டிலிருப்பதோடு தனியாகவும் இருக்கக் கோருகிறேன். ஏனெனில் நாம் ஒரு விசேஷ சங்கதியைப்பற்றித் தங்களிடம் பேச வேண்டியிருக்கிறது.

தங்கள் அன்புள்ள புத்திரி,

தேய்வயானை.

இக்கடிதத்தைக்கண்டதும் பிரபு "பாபம் பரிதாபமான தெய்வயானை. குடும்ப முழுதிலும் அவள் ஒருத்தியையே நான் பட்சத்தோடு நேசித்தது. அவள் சிறுபெண்ணு யிருக்கையில் அத்துரதிருஷ்டமான கலியாணத்தைச்செய்து கொள்ளுமுன், நான் மிக்க அசௌக்கியமா யிருந்தகாலத் தில் என்னை மிக்க சிரத்தையோடு தக்க உபசாரத்தோடு காப்பாற்றினுள். பாபம் அவளைப் பார்க்கவேண்டும். ஆம் அவசியம் அவளைப் பார்க்கவேண்டும்'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார்.

அதன்பிறகு வேறொரு கடிதத்தை யெடுத்து வாசித் தார். அதில் கீழ்க்கண்டபடி யிருந்தது:—

"செவ்வாய் மாலை 17-9-14.

பிரபுவே! தங்களோடு நேரில்வந்து பேசவேண்டி யதைப்பற்றி மிக்க விசனமாயிருந்தாலும், என்னுடைய சந்தர்ப்பங்கள் நாளைக்குத் தங்களைச் சந்தித்துப் பேசும்படி கட்டாயப்படுத்துகின்றன. ஆகையால் நான் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு தங்களைவந்து காண்கிறேன். சிரமை யளிப் பதற்கு மன்னிக்கக் கோருகிறேன்,

தங்கள் வணக்கமுள்ள
(சகோதரர்) புத்திரன்
கேசவநாதன்''

இதைக் கண்டதே பிரபு " அதிகப்பிரசங்கிப்பயல், ஆயி னும் சாதாரண ஜனங்கள் எல்லா சங்கதிகளையும் கேட்டால், அவன் நேர்மையான நடக்கை யுடையவனென்றும் களங்க மற்றவனென்றும் கூறுவார்கள். அதோடு அவன் ஏன் வரு கிறனென்பதை யறியவேண்டும். ஆகையால் அவனையும்

காண வேண்டும். ஆம் காணவேண்டும். ஆனல் சகோதரன் சகோதரியிருவரும் ஒரே நாளில் நம்மை வந்து காண்பது ஆச்சரியமாகவே யிருக்கிறது. ஆனல் இவர்கள் இருவரும் ஏகோபித்து எழுதினர்களென்று நினைப்பதற்கில்லை. ஏனெனில் நெடுநாளாய் அவர்கள் ஒருவரோடொருவர் சந்தித்திருக்கமாட்டார்கள் என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டார்.

அதன்பிறகு மூன்ருவது ஒரு கடிதத்தை யெடுத்து வாசித்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"17—9—1814. என் பிரியமுள்ள சுகசிங்கம் பிரபுவுக்கு:—

நான் தங்களிடம் ஒரு விசேஷத்தைப்பற்றி கோரிக்கொள்ளவேண்டியதா யிருக்கிறது. தாங்கள் அக்கோரிக்கையை யீடேற்றுவீர்கள் என்று பூரணமாய் நம்புகிறேன். ஆனல் அதைக் கடிதத்தில் எழுதத்தகாதது. ஆகையால் நான் நாளை பிற்பகல் மூன்றுமணிக்குத் தங்களைத் தங்கள் மாளிகையில் வந்து சந்திக்கிறேன். தயவுசெய்து அச்சமயம் மாளிகையிலேயே தனியரயிருக்கக் கோருகிறேன்.

தங்கள் அன்பார்ந்த

பத்மாவதி"

இதை வாசித்ததே, பிரபு "பேஷ் நல்ல வேடிக்கை; இன்று முழுதும் நான் வீட்டிலிருக்கத் தீர்மானித்ததே நல்லதாயிற்று. பத்மாவதி இன்னும் ஏதோ என்னிடம் கடன் வாங்க வருகிருள்போ லிருக்கிறது. கடன் - ஹா! எப்போதேனும் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்தாலல்லவோ கடன்? ஒரு மாதத்திற்கு முன்தான் ஆயிரம் பவுன் வாங்கிக்கொண்டு போனுள். அதைத் திருப்பிக்

கொடுக்க வருவதாயிருந்தால் ஒரு கோரிக்கை யிருக்கிற தென்று எழுதியிருக்க மாட்டாள்.

அதன் பிறகு பிரபு நான்காவது கடிதத்தை யெடுத்துப் பார்த்ததும் அது மாரகதவல்லி யெழுதியதென்று அறிந்து கொண்டார். அதில் கீழ்க்கண்ட சங்கதி யடங்கி யிருந் தது:—

"செவ்வாய் மாலை 17-9-1814.

என் அன்பார்ந்த சுகசிங்கம் பிரபு அவர்கட்கு.

நாளை காலையில் நான் என் புத்திரிகளோடு இரத்ன புரிக்கு வந்து சேர்வேன். எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டது. இளவரசரிடமிருந்து உத்திரவு வந்துவிட்டது. இவர்கள் உடனே புறப்பட்டுச் செல்லவேண்டியதே. அவர் களுக்கு யாவும் பூரணமாய்ப் போதித்துவிட்டேன். தாங் கள் செய்யவேண்டிய வேலை யின்னதென்றும் அவரவர்கள் கவனித்து நடக்கவேண்டிய விஷயங்கள் இன்னின்னவை யென்றும் ஒவ்வொருவருக்கும் நன்றாய்த் தெரியும். அதைப் பற்றி யெள்ளளவும் கவலையில்லை. நாளைக்கு நான் அவர் களை வில்வபுரம் துறைமுகத்திற்குக் கொண்டுபோய் அங்கு கப்பலில் ஏற்றிவிட்டு என் வாசஸ்தலத்திற்குத் திரும்பும் வழியில் தங்களைக் காண வருகிறேன். மாலை 4 மணிக்கும் 5 மணிக்கு மிடையில் தங்கள் மாளிகைக்கு வருவேன். அச் சமயம் மாளிகையில் இருக்கக் கோருகிறேன். தங்களிடம் இரகசியமான ஒரு விஷயத்தைப்பற்றி பேசவேண்டியதா யிருக்கிறது.

இப்படிக்கு

மாரகதவல்லி"

இதை வாசித்ததே பிரபு "இது பின்னும் வியப்பே. ஒரே நாளையில் நான்குபேர் காண வருகிறவர்கள். இவை

யொன்றுக்கொன்று என் வியப்பை யதிகரிக்கச் செய்கின் றன. யாராவது இதைக் கதைகளில் வாசித்தாலும் இவ்வாறு தற்செயலாய்ச் சம்பவிக்கக்கூடியதென்று கருதவே மாட்டார்கள். அதிலும் நான் யாருடைய வருகைக்காக முக்கியமாய் இன்றுமுழுமையும் வீட்டிலிருக்கத் தீர்மானித்தேனே—என் சிறு புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்து விட்டு இரண்டாயிரம் பவுன் வாங்கிக்கொண்டு போக வரும் ஆள்—அந்த ஆள் நீங்கலாக நான்குபேர் இன்று காண வருகிறார்கள். அந்த ஆள்—ஆணே பெண்ணே—அந்த ஆள் மற்ற நால்வரில் யாராவதொருவர் நம்மிடம் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் வந்துவிட்டால் என் செய்வது? அவர்களை யுடனே யப்புறப்படுத்திவிட்டு அந்த ஆளைக் கவனிக்கவேண்டியதே. அவர்கள் யாராயிருந்தாலும் சரி, மாகதவல்லியாயினும் சரி, பத்மாவதியாயினும் சரி'' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, மற்ற கடிதங்களை வாசிக்கத் தொடங்கினார். அவற்றில் நாமறிய வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை.

---

15 - வது அத்தியாயம்.

கடிதங்களை யெல்லாம் வாசித்து முடிந்தபின் பிரபு எழுந்து போய் அறையில் வீதியின் பக்கமாயிருக்கும் சாளரங்களில் ஒன்றைத் திறந்து பார்த்தார். வீதியின் எதிர் பக்கத்தில் யாசகனைப்போன்ற ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் விகாரத்தோற்றமும் கந்தல் உடைகளு முடையவனுய் தலையில் காயம்பட்டிருப்பவன் போல் ஒரு கட்டு கட்டிக்கொண்டு கன்னத்திலும் ஒரு பிளாஸ்திரி போட்டுக்கொண்டு எதையும் கவனிக்காதவன் போல் உட்கார்ந்திருந்தான். பிரபு அவனைக்கண்டதும் புன்னகை புரிந்துகொண்டே திரும்பினார்.

பகல் சரியாய் பனிரெண்டுமணி யடித்தது. உடனே வீதியில் ஒரு வண்டி வந்து நின்றதும் முகமூடி யணிந்த ஒரு வாலிப மாது அதிலிருந்து கீழிறங்கி மாளிகைக்குள் நுழைந்தாள். அவள் கூடத்தை யடைந்ததே தன் முகமூடியைக் கழற்றிவிட்டாள். அவள் வனப்பு சொல்லத்தரமானதல்ல. ஆடவர் எத்தகையோரையும் ஒரு நொடியில் மயக்கிவிடக் கூடியது. ஆனால் அவள் முகத்தில் தூரத்தில் தோன்றும் மேகச் சாயல்போல் துக்கத்தின் குறி யிருந்தது. அவள் வயது இருபத்திரண்டு இருக்கும். கூடத்திலிருந்த காவலாள் அவளைக் கண்டதும் அவள் யாரென்று தெரிந்து கொண்டு மிக்க வணக்கத்தோடு வந்தனமளித்தான். அவள் பிரபு யிருக்கிறாரா? என்று கேட்டதே மற்றொரு வேலைக்காரன் ஆகா இருக்கிறார் வாருங்கள் என்று அவளை யழைத்துக்கொண்டுபோய் பிரபு இருக்கும் அறைக்குள் விட்டான்.

பிரபு அவளைக் கண்டதும் ஆவலோடு எழுந்து முன் சென்று "குழந்தாய் உன்னைக் காண மிக்க சந்தோஷமடைகிறேன்'' என்று ஆலிங்கனம் செய்து கொண்டு அவள் உச்சியை முகர்ந்து வாஞ்சையோடு நெற்றியில் முத்தமிட்டுக் காத்தைப்பற்றி யழைத்துப்போய் ஒரு ஆசனத்தில் உட்காரவைத்துத் தானும் அவளருகில் உட்கார்ந்தார்.

உலகில் எந்த மனிதனுக்கும் ஏதாவது ஒரு வஸ்துவின் மேல் விசேஷ அன்பு இருந்தே தீரும். சற்றும் ஈவிரக்கமின்றி வழியில் செல்லும் பிரயாணிகளைக் கொன்று சூறையாடும் கள்ளனும் தன் ஸ்திரீயிடம் அக்கொடிய குணத்தைக் காட்டாது இணங்கி விடுகிறான். உலகையே வெறுத்த சந்நியாசி ஒரு நாய்க்குட்டியின்மேல் அன்பு காட்டுகிறான். ஒத்தைக் காசைக்கூட செலவுசெய்ய மனம் வராத பரம

லோபியாகிய ஒரு கிழவிகூடத் தான் பட்டினி யிருந்து பணத்தைச் சேர்த்தாலும் தான் வளர்த்த பூனைக்குட்டிக்குப் பாலும் மாமிசமும் வாங்கி யருந்தச் செய்கிறாள். அது போல் சற்றேனும் ஈவிரக்க மில்லாமல் கன்னியர்களின் கற்பை யழிக்க அஞ்சாத கன்மனமுடையவனும், தன் வுலக இன்பம் கைகூடவேண்டின் யாருக்கும் எவ்வித அக்ரமும் செய்ய அஞ்சாத பாதகனும், தன் பத்தினியையே சற்றும் அன்பின்றி நடத்தி அவள் இறந்தபோது சற்றேனும் முகவாட்டம்கூட அடையாதவனுமாகிய இந்தச் சுகசிங்கம் பிரபு தன் தம்பியின் புதல்வியாகிய தெய்வயானை யென்ற யிப்பெண்ணிடம் மட்டும் உண்மையான, புத்திரிவாஞ்சை வைத்திருந்தான். இவ்வுலகில் அவன் அன்புகாட்டும் வஸ்து அவள் ஒருத்தியே. தன் தம்பியின் ஏகபுத்திரனும் தனக்குப் பின் பட்டத்திற்கும் ஆஸ்திக்கும் பாத்தியமுடையவனும், இதே தெய்வயானையின் தமையனுமாகிய கேசவநாதன் மேல் கூட இவனுக்கு வெறுப்பே. மற்ற சுற்றத்தார்களில் எவரையுமே இவன் விரும்புவதில்லை.

தெய்வயானையை அவளுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே இவன் நேசித்து வந்தான். ஒரு காலத்தில் இவன் நீண்டகாலம் வியாதியுற் றிருந்தபோது அவள் மிக்க அன்போடும் அக்கரையோடும் அவனைக் கவனித்து இரவும் பகலும் அவனருகில் காத்திருந்து உபசாரம் செய்துவந்தாள். அதுமுதல் அவள்மேல் அவனுக்கு அதிக அன்பு நிலையாய் விட்டது. அப்படி யிருந்தும் அவனுடைய அன்பு ஒரு மாதிரியானதே. தெய்வயானை ஐந்து வருடங்களுக்கு முன் தன் பெரிய தந்தையின் அனுமதி யில்லாமலே தேவராயன் என்ற ஒருவனை மணம்புரிந்துகொண்டாள். பிரபு அம்மணத்தைத் தான் ஒருபோதும் ஒப்புக்கொள்வ தில்லையென்றும், அந்தத் தேவராயனுக்கு எவ்வித உதவியும் செய்வதே

யில்லையென்றும், அவன் முகத்தில் விழிப்பதே யில்லையென்றும் மிக்க கொடிய சபதம் செய்துகொண்டார். அவள் மேல் அவர் கொண்டிருந்த அவ்வளவு அன்பும் அவருடைய பிடிவாதத் தீர்மானத்தைச் சற்றேனும் மாற்றமுடியாமற் போயிற்று. ஆகையால் கடந்த ஐந்தாண்டுகளாக அவள் தன் பெரிய தந்தையின் குடும்பத்தில் வசிக்கவில்லை.

இப்போது மறுபடி இருவரும் சந்தித்தார்கள். பிரபு தன் தம்பியின் புத்திரியைப் பட்சமாய் வரவேற்றார். அவள் மணம் செய்துகொண்ட ஐந்து வருட காலங்களில் அவர் அவளை யடிக்கடி கண்டவரல்ல. அவர் கடைசியாய் அவளைப் பார்த்து ஆறுமாதங்களுக் கதிகமே யாயின. இப்போது அவளுடைய அரிய வனப்பு முதிர்ச்சியடைந்து மிக்க பிரகாசத்தோடு விளங்குகிறது. "அந்தோ தேவமாதைப்போல் இத்தகைய அழகு வாய்ந்த இவள் அநியாயமாய் அத் துஷ்டப்பயலையா மணம்புரிந்து கொள்ளவேண்டும்" என்று அவர் மனம் உள்ளுக்குள்ளே வேதனையடைந்தது.

தேவாரயன் தெய்வயானையிலும் மிக்க அதிகவயதுடையவனென்பதற்காகவாவது, அவன் எத்தகைய துஷ்டகாரியங்களிலும், அக்கிரமங்களிலும் முன் பின் யோசிக்காமல் பிரவேசிக்கும் மிக்க அயோக்கியனென்பதற்காவது, அழிகாலி யென்பதற்காவது, இவற்றில் எதற்காகவாவது அவர் வியாகூலப்பட்டவரல்ல. ஆகக் கூடி அவன் செல்வவந்தனல்ல, உயர்ந்த பிரபு வமிசத்தைச் சேர்ந்தவனல்ல என்ற இந்த இரண்டிற்காகவே அவர் வருத்தப்படுவது. மேற்கண்ட இரண்டும் இருந்துவிட்டால் போதும். குணமா, கல்வியா, யோக்யதையா, கடவுள் பக்தியா இவைகளைப் பற்றி யவருக்கு அவசியமேயில்லை. இதனால் தெய்வயானை

தன் குலப்பெருமையையும் கௌரவத்தையும் அடியோடு அழித்துக்கொண்டாள் என்பதே அவர் தீர்மானம். இன்னும் அவர் தன்மேல் இவ்வளவு அன்புகாட்டினும் தன் கணவன் பெயரை மட்டும் ஒருதரம் அவர் முன் கூறிவிட்டால் உடனே யவர் அடங்காக் கோபங்கொண்டு தன்னை வைவதோடு தான் வந்த காரியமே யடியோடு கெட்டுப் போகும் என்று தெய்வயானைக்கு நன்றாய்த்தெரியும். அவள் அழகோடு, தைரியமும், தந்திரமும், சமயோசித புத்தியும், சாமர்த்தியமும் உடையவள். பிரபு அவளை யுற்றுநோக்கி உன்னைக் கண்டதால் நான் சந்தோஷமடைகிறேன்" என்றார்.

தெய்வநாயகி "தந்தையே! தங்களைக் கண்டது எனக்கும் மிக்க சந்தோஷமாக இருக்கிறது. தாங்கள் சுகத்தோடும் சந்தோஷத்தோடு மிருப்பதாகவே நம்புகிறேன்" என்றாள்.

பிரபு:—நானும் நீ சுகமாகவும் சந்தோஷமுமாகவே யிருக்கிறாயென்று நம்புகிறேன். அப்படி யுன் துயரத்தைக் குறைக்கவேண்டிய அவசியமிருந்து அதற்காக நான் செய்ய வேண்டிய உதவி யேதேனுமிருந்தால் செய்யச் சித்தமாயிருக்கிறேன்—அது உன்வரையில் மட்டுமே சம்பந்தப்பட்டதாயிருக்கிற வரையில்.........

தெய்வ:—தந்தையே மிக்க வந்தனம். நான் முன்னமே யென் கடிதத்தில், நான் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி பேசவே தங்களிடம் வருவதாய் எழுதியிருந்தேனல்லவா. ஒரு உதவியைக் கோரவே அப்படி யெழுதினேன்.

பிரபு:—கூறு! அதைக்கூறு! ஆனால் அந்த ஒரு ஆசாமியைப் பற்றி மட்டும் ஒரு பிரஸ்தாபமும் செய்யாதே—ஒரு

வார்த்தைகூட—இவ்வுதவி யுனக்காக மட்டுமே யிருக்க வேண்டும்.

தெய்வயானை ஆத்திரத்தோடு "இல்லை யில்லை. இவ்வுதவி யெனக்காக மட்டுமே. அது வேறொருவருக்காகவுமில்லை. அதில் ஒரு காசுகூட வேறு யாருக்காகவும் செலவு செய்யப்படமாட்டாது. அது என்னுடைய ஒரு பெரிய இக்கட்டைநீக்கும். நான் கேட்க வந்தது பண வுதவி என்றாள்.

பிரபு:—நான் அப்படித்தான் நினைத்தேன். அப்படியே உதவிசெய்கிறேன். அவசியம் செய்கிறேன். நீ யின்னும் எத்தனை நாட்கள் இரத்னபுரியில் தங்கியிருப்பாய்?

கன்னிகை:—தங்கள் உதவி கிடைத்தால் நான் சில மணி நேரங்கள்கூட இங்கிருக்கமாட்டேன்; உடனே போய் விடுவேன். தந்தையே பிறகு தாங்கள் என்னைக்காண நெடுநாட்கள் செல்லுமென்பது உண்மை.

பிரபு "நான் மறுபடியும் காண நெடு நாட்கள் செல்லுமா! ஓ அப்படியானல் உன் சுக க்ஷேமத்திற்கு வேண்டிய அளவு நான் உதவி செய்யவேண்டியதே. கொஞ்சம் பொறு இதோ வந்துவிட்டேன்" என்று கூறியதும் உடனே யெழுந்து சென்றார்.

அவர் நேராய்த் தன் படுக்கையறைக்குச் சென்று முன் திறந்த அறையைத் திறந்து நோட்டுகளை யெடுத்து இரண்டாயிரம் பவுன்கள் பெறும்படியானவற்றை யெடுத்துக்கொண்டு திரும்பிவந்தார். அவர் ஏன் இரண்டாயிரம் பவுன் என்ற தொகையையே எடுக்கவேண்டும் என்ற காரணம் புலப்படவில்லை. அன்று அவர் தன் புத்தகத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு 2 ஆயிரம் பவுன்கள் கொடுப்பதற்காகவே வீட்டில் தங்கியபடியால் அத்தொகையே யவர் மனதில் முன்னே யிருந்தது. முன் தாம் தெய்வயானைக்கு

அதே தொகை கொடுத்திருக்கிறார். ஆகையால் இப்போதும் அப்படிக்கொடுக்க நினைத்தாரோ நாம் கூறமுடியாது. அவருக்கே நாம் ஏன் இத்தொகையையே யெடுத்தோமென்று தெரியாது. இரோஜா அறைக்குத் திரும்பி வந்ததும் அந்த நோட்டுகளை யவளிடமளித்து,

"இந்தா, இந்த இரண்டாயிரம் பவுன்களை யெடுத்துக் கொண்டு உனக்காகவே செலவு செய்துகொள்......" என்பதற்குள் அவள் அவரை யாலிங்கனம் செய்துகொண்டு தன் நன்றியை கண்ணீர் பெருக்கால் வெளியிடத் தொடங்கினாள். பிரபு மனங்கரைந்து "போதும் போதும்; நல்ல பெண். உன் நன்றியும் அன்பும் உன் துயரமும் எனக்கு நன்றாய்த் தெரியும்; ஆனால் அவற்றைப்பற்றிப் பிரஸ்தாபிக்க எனக்குப் பிரியமில்லை. அவ்வளவே. நீ சந்தோஷமாயிரு" என்றார்.

தெய்வநாயகி தன் கண்களைத் துடைத்துக் கொண்டு "என் சகோதரனை இடையில் பார்த்தீர்களோ?" என்றாள். பிரபு உடனே கேசவநாதனிடமிருந்து வந்த கடிதத்தை யெடுத்துக்காட்டினார். அதைக்கண்ட தெய்வயானை "ஹா இன்னம் ரகசியத்திலேயே யிருப்பதாய்த் தெரிகிறது; ஆயினும் நான் சந்திக்காதிருப்பதே நலம் என்று கூறி " தந்தையே நான் விடைபெற்றுக் கொண்டு செல்கிறேன்" என்றாள்,

பிரபு:— "சுகமாய்ப் போய்வா. எக்கிருந்தாலும் எனக்கு அப்போதைக் கப்போது உன் க்ஷேமத்தைப்பற்றி ஒரு வரியாவது தெரிவித்துக் கொண்டிரு" என்றார்.

கன்னிகை யவ்வாறே நடந்து கொள்வதாய்க் கூறி விட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றாள்.

அவள் சென்ற சற்று நேரத்திற்குள் கேசவநாதன் அறைக்குள் வந்தான். அவள் தன் சகோதரியைப் போலவே அழகிய உருவமுடையவன். ஆனால் புருடத்தனத்

திற்குரிய கல்வி யறிவின் பிரகாசமும், சுதேச்சையான குணமும், உயர்ந்த குணங்களும், கெம்பீரமான தோற்றமு முடையவன்.

அவன் அறைக்குள் வந்ததும் தன் பெரிய தந்தையை நோக்கி, "பிரபுவே! நான் என் கடிதத்தில் குறித்தபடி நான் தங்கள் சமுகத்திற்கு மறுபடி வரும்படி கட்டாயப் படுத்தப் பட்டதற்காக மிக்க விசனிக்கிறேன்—" என்றான்.

பிரபு அவனுடைய சகோதரி முன் காட்டிய குணங் களுக்கு மாறாய் வெறுப்பான குணமுடையவராய் "என்? அதனால் தீட்டுண்டாகி விடுமோ?" என்றார்.

கேசவநாதன்:— பிரபுவே! நமக்குள் ஒரு சமயம் ஏதேனும் சச்சரவு நேரிடும் பட்சத்தில் அது தங்களாலுண்டாக வேண்டுமே யன்றி என்னாலுண்டாகாது. நான் தங் களை அன்போடும் கௌரவத்தோடும் ஒருபோதும் கருத முடியாதேனும் தங்களை யவமரியாதையாய் நடத்தவேண்டுமென்று எள்ளளவும் கருதியவனல்ல.

பிரபு:— கேசவநாதம் பிரபுவே! உன்னுடைய செய்கை முழுமையுமே கோபமூட்டத் தக்கதாயிருக்கவில்லையா. நான் உனக்குரிய பட்டப்பெயரைக் கூறினால் நீ யேன் அதை அகௌரவமாய்க் கருதுகிறாய்?

கேசவ:— நான் அது எவ்வளவு அகௌரவ மடைந்திருக் கிறதாய்க் கருதி யிருக்கிறேனென்பது ஆண்டவனுக்கே தெரியும். அதைப்பற்றிப் பேசத் தொடங்கினால் வீண் மனஸ்தாபங்களுக்கு இடமுண்டாகும். இனி விடை யளித்தால் நான் வந்த காரியத்தைக் கூறுகிறேன்.

பிரபு அவனை யுட்கார் என்று கூற மனம் பிடிக்காமலே தானும் நின்று கொண்டே, "கூறு கூறு! வந்தகாரியத்தைக் கூறு" என்றார்.

கேசவ:— நான் கொஞ்சம் பணஉதவி வேண்டித் தங்களிடம் வந்தேன். கடன் கொடுக்கும் மார்வாடிகள் முதலியவர்களிடம் போய் வாங்க எனக்குப் பிரியமில்லை.

பிரபு:—நீ யிவ்வளவு கண்டிப்பாகவும் கௌரவத்தோடும் நடந்துகொள்கிறவன்—நீயா மார்வாடிகளிடம் கடன் வாங்க நினைத்தாய்?

கேசவநாதன் குற்றம் செய்யாதவனும், சூது பொய் இல்லாதவனும், களங்கமற்றவனும் போல் அச்சமின்றி "ஏன் வாங்க நினைக்காமல்? இது சாதாரண விஷயமே. இச்சமயம் எனக்கு இரண்டு அல்லது மூவாயிரம் பவுன்கள் அவசியம் வேண்டியிருக்கிறது. அதற்காக அவர்களிடம் போய் வாங்குவதைவிட......"என்பதற்குள்,

பிரபு:—"என்னிடம் சொந்த மிருக்கிறதென்று கேட்க வந்தாய் போலும். ஒருசமயம் நான் கொடுக்கமாட்டேன், மார்வாடியிடம் வாங்கிக்கொள் என்றாலோ?" என்றார்.

கேசவ:—இல்லை யில்லை. அப்போதும் மார்வாடியிடம் போகேன். தகுந்த மரியாதையான அட்டர்னியிடமாவது வேறு யாராவது தக்க பெரிய மனிதரிடமாவது வாங்கிக் கொள்வேன்.

பிரபு:—"ஏன்? அவர்களெல்லாம் நான் பணக்கஷ்டத்திலிருக்கிறேனென்றும் ஆகையால் உனக்கு உதவி செய்ய முடியவில்லை யென்றும் எண்ணிக்கொள்ளவா? அம்மாதிரி யொருவரும் என்னைப்பற்றி பொய் வதந்தி யுண்டாகும்படி ஒருபோதும் இடங்கொடுக்கமாட்டேன். நான் உலக போகத்தில் வீணாய் வருமான மனைத்தும் வீண் செலவு செய்து விடுகிறேனென்று நீ கூறுவ

சென்னை-600 008
186538

தாயினும், உனக்கு ஆபத்திற்கு உதவும் வண்ணம் எச்சமயத்திலும் இரண்டாயிரம் மூவாயிரம் பவுன் கையிருப்பில் வைத்துக்கொண்டே யிருக்கிறேன். உனக்கு எவ்வளவு தொகை வேண்டுமென்பதை மட்டும் கூறு'' என்றார்.

அவர் தன் பிரபுப்பட்டத்தை யெவ்வளவு மதிப்பாய்க் கவனிக்கிறாரோ அப்படியே, தான் செல்வ வந்தன் என்ற பெருமையையும் அதிகமாய் மதிப்பவர்.

கேசவ:— " இச்சமயம் எனக்கு இரண்டாயிரம் பவுன்கள் இருந்தால் போதும்'' என்றான்.

பிரபு:— "இன்றைக்கு எதுவும் இரண்டாயிரம் சவரன்களாகவே யிருக்கிறது. இன்று நடக்கும் சங்கதிகளெல்லாம் வியப்பாகவே யிருக்கின்றன'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு " சற்று பொறு, என் செக் புத்தகத்தை யெடுத்து வருகிறேன்'' என்று கேசவநாதனைப்பார்த்துக் கூறிவிட்டு அறையை விட்டுச் சென்றார்.

தன் செக்புத்தகத்தை யெடுத்து வருவதாய்க் கூறிச் சென்று ஐந்து நிமிடங்களில் திரும்பிவந்தார். அச் சமயம் கேசவநாதன் பூத்தொட்டிகளில் பூச்செண்டுகளில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளில் ஒன்றை யெடுத்து மிக்க உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டதே பிரபு மிக்க வியப்பும் கோபமுமடைந்து "இதென்ன எதையும் ஆராய்ந்து பார்க்கிற கெட்டவழக்கம்'' என்றார்.

கேசவநாதன் பயமாவது களங்கமாவது சற்றுமில்லாத சாந்தகுணமாகவே "பிரபுவே நான் வேண்டுமென்று அப்படிச் செய்யவில்லை. எனக்குப் புஷ்பங்களில் அதிக பிரியமென்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. அந்தப்

பூச்செண்டு என் கண்ணிற்படவே அதை யெடுத்தேன். அதன் கீழ் இத்துப்பாக்கியைப் போலவே மிக்க சாமர்த்தியமாய் போர்ஸ்லெயினுல் செய்யப்பட்ட வேடிக்கைச் சாமானே யென்று நம்பி இதைக் கையிலெடுத்தேன்; ஆனுல் உடனே இது ஒரு மெய்யான கைத்துப்பாக்கியேயென்றும் அதிலும் கெட்டிக்கப்பட் டிருக்கிறதென்றும் அறிந்தே யெனக்குண்டான ஆச்சரியம் அடங்கு முன் தாங்கள் வந்து விட்டீர்கள். இவ்வளவே நடந்த உண்மைச் சங்கதி. இது தங்களுக்குக் குற்றமாய்த் தோன்றினுல் என்னை மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே துப்பாக்கியை அது இருந்தவிடத்தில் வைத்துவிட்டான்.

அவன் மொழிகளைக் கேட்ட பிரபு அவன் வேணுமென்று அப்படிச் செய்தானென்ருவது அவன் கூறுவது பொய்யென்ருவது நினைப்பதற்கில்லை. ஆகையால் ஒன்றுமே பதில் கூருமல் ஆசனத்தி லுட்கார்ந்து ஒரு செக் எழுதி கேசவநாதனிடம் தந்து "இந்தா நீ கேட்ட இரண்டாயிரம் பவுன். இது நீ கடன் வாங்கவேண்டிய அவசியத்தை நீக்கிவிடும்'' என்ருர்.

கேசவ:—"பிரபுவே! இவ்வுதவிக்காகத் தங்களுக்கு மிக்க வந்தன மளிக்கிறேன்'' என்ருன்.

பிரபு:—நீ யென்னிடம் பேசவேண்டிய விஷயம் இன்னும் ஏதேனு முண்டோ?

கேச—ஒன்றுமட்டுமே. என் சகோதரி தெய்வயானையை யிடையில் கண்டீரோ யென்பதே.

பிரபு:—ஒருமணி நேரத்திற்கு முன்பே இங்கு வந்து சென்ருள்.

கேச:—ஆ! அப்படியானுல் நகரத்தில் இருக்கிருள். தயவு செய்து அவள் தங்கியிருக்கு மிடத்தைத் தெரிவித்தால்

அவளைக் காணப் பிரியப்படுகிறோம். முன்பு சந்தித்த போது இருவரும் மனஸ்தாபத்தோடு பிரிந்துவிட்டோம்.

பிரபு:—"அதை நான் தெரிந்துகொள்ளவில்லை. ஏனெனில் அவள் இன்னும் ஒருமணிநேரத்திற்குள்ளாக இந்நகரை விட்டுப் போய்விடப் போவதாய்க் கூறினாள். இவ்வளவே எனக்குத் தெரியும்" என்றான்.

கேசவநாதன் உடனே "அப்படியாயின் நான் போய் வருகிறேன். பிரபுவே மிக்க வந்தனம்" என்று கூறிவிட்டு விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

---

16 - வது அத்தியாயம்.

மணி சரியாய் பிற்பகல் மூன்றடித்தது. உடனே ஒரு அழகிய வண்டியொன்று வீதியில் வந்து நின்றதும், கம்பீரமான ஆடையாபரணங்களை யணிந்துகொண்டிருக்கும் ஒரு மாது அதிலிருந்து கீழிறங்கி சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குள் நுழைந்தாள்.

அவளுக்கு வயது நாற்பத்தைந்திற்குக் குறைவாயிராது. அவள் பாலியத்தில் மிக்க அழகுடையவளா யிருந்திருப்பாள் என்று அவள் முகத்தால் இன்னும் தெரிந்துகொள்ளலாம். ஆனால் இப்போது அவள் தான் இன்னும் வனப்புடைய மங்கையென்றே காண்போர் மதிக்கவேண்டும் என்ற ஆசையால் வர்ணங்கள், பசை, மயிர்ப்பூச்சு முதலியவற்றின் உதவியால் தன்னால் கூடியவரை செயர்க்கை வனப்பை யுண்டாக்கிக்கொண் டிருக்கிறாள். வேலைக்காரன் அம்மாதை யழைத்துப்போய் பிரபுவிருக்கும் இரோஜா அறையில் விட்டு 'பத்மாவதியம்மாள்' என்று கூறிவிட்டுச் சென்றான்.

பிரபு அம்மாதைக் கண்டதே எழுந்து ஆவலோடு "ஆ என் பிரியமான சினேகியே!" என்று முன்சென்று கைலாகு கொடுத்து அழைத்துப்போய் ஒரு ஆசனத்தில் உட்காரவைத்து அவளை நோக்கி "ஆ பேஷ்! நீ எப்போதும் போல் வாலிபமாகவும் வனப்புடையவளாகவும் இருக்கிறாய்" என்றார்.

பத்மாவதி:—"ஆ! இத்தகைய முகஸ்துதி வார்த்தைகளைப் பேசுவதில் நீர் எப்போதும் கைதேர்ந்தவரே யென்றறிவேன்" என்றாள்.

அம்மாது மேலுக்குமட்டும் அப்படிக் கூறினாளே யன்றி யுள்ளத்தில் அவர் அவ்வாறு கூறியது அவளுக்கு மிக்க சந்தோஷமே.

பிரபு:—சே சே! நான் கூறியது வெறும் முகஸ்துதிக் கென்றேயா மதித்துவிட்டாய்? ஒருகாலுமில்லை. ஆயினும் செல்வாக்கோடு இருக்கும் முப்பது முப்பத்திரண்டு வயதுடைய மாது வாலிபமாகவும் அழகுடையவளாகவும் காணப்படும் அப்படி யொன்றும் அதிசயமான விஷயமல்ல.

பத்மாவதி:—ஏன்? நாற்பது நாற்பத்தைந்து வயதுடைய நீர் நல்ல வாலிபமும் யௌவனமுமுடைய விடபுருடனாகவே காணப்படுகிறீர்.

பத்மாவதிக்கு வயது 45 க்குமேல் 50 க்குள் இருக்குமென்பது உண்மையென்று பிரபு திட்டமாயறிவார். பிரபுவுக்கு வயது அறுபதுக்குக் குறைவாயிராதென்றும், அவர் தன் பொய்ப்பல்லை யிரவுமுழுதும் ஒரு கிண்ணத்தில் பன்னீரில் ஊறவைத்து காலை யெடுத்துக் கழுவி மறுபடி வாயில் மாட்டிக்கொள்பவர் என்று பத்மாவதி எள்ளளவு ஐயமுமின்றி யறிவாள். அப்படியிருந்தும் இந்த இரண்டு வீண்

பெருமைக்காரரும் மேல் கூறியவாறு குறைந்த வயதுடைய வர்களென்று ஒருவரை யொருவர் உண்மையாகவே நம்புவதுபோல் அபிநயம் செய்துக்கொள்ளும் அற்ப சந்தோஷிகள்.

இவர்கள் இவ்வாறே இன்னும் சற்றுநேரம் சம்பாஷித்தபின்,

பிரபு:—"நீ முதல் முதல் இளவரசனைச் சந்தித்தகாலம் உனக்குக் கவன மிருக்கிறதா?" என்றார்.

பத்மாவதி வெறுப்போடு " அந்த ஆளைப்பற்றி யென்னிடம் பேசவேண்டாம். பிரபுவே! அந்த ஆளுக்கும் எனக்கும் ஆதி முதல் இருந்து வந்த சினேகமும் நடந்த மற்ற எல்லா விஷயங்களும் உமக்கும் முழுமையும் நன்ருய்த் தெரியும். அப்படியிருக்கக் கடைசியில் இளவரசன் என் விஷயத்தில் நடந்து கொள்ளும் மாதிரி சற்றேனும் திருப்திகரமானதாவென்ருவது தகுதியானதா வென்ருவது நீர் நினைகிறீரா ?" என்ருள்.

பிரபு:— அதைப்பற்றி நீ குறை கூறிக்கொள்வது சரியானதல்ல. ஏனெனில் இளவரசனுடைய நட்பை வாலிபத்திலிருந்து பெற்றிருந்த மற்ற பேர்களனைவரும் உன்னிலும் அதிக திருப்திகரமாக நடத்தப்பட்டிருக்கிருர்க ளென்று நீ நினைக்கிருயோ ? ஒரு போதும் இல்லை.

பத்மாவதி:— "சேசே ! வாலிபமும் அழகும் இருக்கும் போது அவர்களைக் கற்பு வழியில் நடக்க வொட்டாது தடுத்துக் கெடுத்து அவர்களை வாலிபமும் அழகும் இருக்கும் வரையில் ஏதோ மிக்க அன்போடு நடந்து வந்து, அவர்கள் வாலிபமும் அழகும் குறைந்தபோது

அவர்களை யலட்சியமாய்ப் புறக்கணித்து விடுவது ஒரு இராஜகுமாரனுடைய அந்தஸ்திற்கும் பெருமைக்கும் யோக்கியதைக்கும் தகுதியான நடக்கை யாகுமா? சீ சீ!" என்றாள்.

பிரபு:—ஆயினும் உன்னைப் பற்றி மட்டும் அவர் சந்தர்ப்பம் நேரிடும்போதெல்லாம் அன்போடும் நன்றியோடுமே பேசுகிறார். ஆனால் கூட்டங்களில் சந்திக்கும்போது சாதாரணமாய் அறிமுகமானவர்களோடு நடந்து கொள்கிற மாதிரியே யுன்னிடமும் நடந்துகொள்கிறார். ஏனெனில் அச்சமயங்களில் விசேஷ அன்பு காட்டி நடந்தால் காண்போர் ஏதேனும் வீண்புகார் உண்டாக்குவார்கள் என்ற அச்சமேயொழிய வேறொன்றுமில்லை. நீ யதைப்பற்றி வித்தியாசமாய்க் கருதலாகாது.

பத்மா:—ஆயினும் எனக்கும் அவருக்கும் சிலகாலமாய் எல்லாவித சம்பந்தங்களும் உடைந்துபோய் விட்டனவென்று உமக்கு நன்றாய்த் தெரியும். அது எப்படியாவது கிடக்கட்டும். இப்போது அதைப்பற்றி வாதிக்க எனக்கு அவகாசமுமில்லை, பிரியமுமில்லை. நான் ஒரு கோரிக்கையை வேண்டி யிப்போது தங்களிடம் வந்தேன்.

பிரபு:—மிக்க சந்தோஷம். அது எவ்விதமான கோரிக்கையோ?

பத்மா:—ஆஹா! ஹா! எவ்விதமான கோரிக்கையோ? பேஷ். அது எவ்விதமான கோரிக்கையென்று கேட்பதற்குப் பதிலாக நீ கேட்ட கோரிக்கை நிறைவேற்றப் பட்டது என்றல்லவோ தாங்கள் கூறியிருக்கவேண்டும்?

பிரபு:—ஓ! அப்படியானால் சரிசரி. அப்படியே நீ கேட்ட கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

பத்மா:—நண்பரே! தாங்கள் எச்சமையத்திலும் உதவி செய் வீர்களென்ற நம்பிக்கை எனக்குத் தங்கள்மேல் எப் போதும் பூரணமா யுண்டு. எனக்கு இச்சமயம் சொல்ப பணவுதவி வேண்டியது அவசியமா யிருக் கிறது. அதாவது இச்சமயம் தாங்கள் இரண்டாயிரம் சவரன்கள் கடனயளித்தால் இரண்டு மூன்று வாரங் களில் மொத்தமாய் யாவற்றையும் பைசல்செய்து விடு றேன்.

பிரபு இதைக்கேட்டதே "இரண்டாயிரம் பவுனு?" என்றார்.

பத்மாவதி இதைக்கேட்டு தவருய் அர்த்தம் செய்து கொண்டு மனத்தாங்க லடைந்து, "பிரபுவே நான் தங்களி டம் கேட்க வந்தது தவருயின் என்னை மன்னிக்கவேண்டும். நான் இப்படிப் புத்தி பிசகி நடந்துகொண்டு எதிர் மறை யான விடையை யேற்றுக்கொள்ள நேர்ந்தது என் கெட்ட காலமே" என்ருள்.

பிரபு துள்ளி யெழுந்து "அய்யோ! நீ பூராய் தப்பு அர்த்தம் செய்து கொண்டாய். இப்போது நான் இரண் டாயிரம் பவுனுவென்று வியப்போடு கூவியது உன் விஷயத் தைப் பற்றியே யல்ல. இன்று நான் இதுவரையில் இரு வர்க்குப் பணவுதவி செய்ய நேர்ந்தது. இருவரும் இதே தொகை கேட்டார்கள். இப்போது வந்த மூன்ருவதாகிய நீயும் அதே இரண்டாயிரம் பவுன் வேண்டு மென்கிருய். கிடக்கட்டும் நீ கேட்டபடி யளிக்கிறேன்.

பத்மா:—"தாங்கள் எப்படியும் எனக்கு உதவி செய்வீர்க ளென்று நன்கறிவேன். எனக்குப் போதுமான சொத்

திருக்கிறதென்று தங்களுக்குத் தெரியும். ஆனால் இச் சமயம்......" என்பதற்குள்,

பிரபு:—எனக்கு விவரம் ஒன்றும் வேண்டாம். செல்லப்பன் விருதா செலவு செய்கிறதில்லையே?

பத்மா:—அவன் வீண் செலவு செய்கிறவனல்ல. ஆனால் மேலான அந்தஸ்திலுள்ளவர்களோடு சகவாசம் செய்கிறபடியால் கொஞ்சம் அதிகமாகவே செலவு செய்ய வேண்டிய அவசியம் நேர்கிறது. ஆயினும் அவன் என்னமோ எப்போதும் நேர்மையான நடக்கையை யுடைய வாலிபனே.

பிரபு:—அதோடு எங்களிடமெல்லாம் மிக்க நட்புடையவன். சரி. நான் உனக்கு இரண்டாயிரம் பவுனுக்குச் செக் கொடுக்கிறேன்.

பத்மா:—ஏன்? தங்களிடத்தில் நோட்டுக ளில்லையோ? ஏனெனில் நான் நோய் வீட்டிற்குச் செல்லவேண்டும். அங்கு சென்றதே சில சில்லரைக் கடன்களை யொழிக்கவேண்டி யிருக்கிறது.

பிரபு:—"அப்படியாயின் ஒருபாகம் சவரன்களாகவும், ஒரு பாகம் நோட்டுகளாகவும் தருகிறேன். சற்று பொறு. இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

பிறகு அவர் திரும்பி வந்தபோது பத்மாவதி அறையி லுள்ள பல சாமான்களையும் மிக்க வியப்போடு பார்த்துக் கொண் டிருப்பதைக் கண்டார்.

பத்மாவதி அந்த அறையின் அலங்காரத்தைப்பற்றி மிக்க புகழ்ச்சியாய்ப் பேசினள். கடைசியில் நேரமாய்விட்டது. இனி நான் தாமதிக்க முடியாது என்றாள்.

பிரபு "இதோ ஐந்நூறு பவுன்கள் பொற்சவரன்களாகவும் நோட்டுகளாகவும், மீதியைச் செக்காகவும் கொடுக்கிறேன்" என்றார்.

பத்மாவதி "போதும். அவ்வளவு ரொக்கம் இருந்தால் போதும்" என்றுகூறி பணத்தையும் செக்கையும் வாங்கிக்கொண்டு விடை பெற்றுக்கொண்டு சென்றாள். பிரபு சற்று நேரம் சிந்தனையில் உட்கார்ந்துகொண்டிருந்தார்.

---

17 - வது அத்தியாயம்.

மணி மாலை நாலரையாயிற்று. பிரபுவிற்குக் கலக்கம் உண்டாய்விட்டது. ஏனெனில் தன் கைப்புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்து விட்டு இரண்டாயிரம் பவுன் வாங்கிக்கொண்டு போகவேண்டிய ஆள் இன்னும் வரவில்லை. அவருக்குச் சற்று திகிலாய் விட்டது. எழுந்து போய் வீதியின் பக்கமாயிருக்கும் சாளரத்தைத் திறந்து பார்த்தார். பிச்சைக்காரன் முன் இருந்த விடத்திலேயே வுட்கார்ந்து கொண்டு தலை நிமிர்ந்து வானத்தைப் பார்ப்பவன்போல் இருக்கிறான். ஆயினும் அவன் தன் வேலைக்காரனாகிய பிச்சி முத்தின் அறையிலுள்ள சாளரத்தையே நோக்கிக்கொண்டிருக்கிறான் என்று தெரிந்துகொண்டார். அவர் சாளரத்திலிருந்து திரும்பி யதே வீதியில் இரட்டைப் புரவிகள் பூட்டிய ஒரு வண்டிவந்து நின்றதும் மாகதவல்லியம்மாள் அதினின்றும் இறங்கி மாளிகைக்குள் நுழைந்தாள்.

அவள் பிரபுவின் அறைக்குள் பிரவேசித்ததும் அவள் முகத்தைக் கண்ட பிரபு அவள் ஏதோ மிக்க துயரத்தையும் கோபத்தையும் மனத்துடிப்பையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறாள் என்று அவள் முகக்குறியால் அறிந்துகொண்டு

"என் பிரியமுள்ள மாகதம்! என்ன விசேஷம் நடந்தது?" என்றார்.

மரகதவல்லி:—"என் பிரியமுள்ள பிரபுவே! எத்தகைய ஆபத்து! என்ன திகில்?" என்று பிரலாபித்துக் கொண்டே ஆயாசத்தோடு ஒரு நாற்காலியில் சாய்ந்து விட்டாள்.

பிரபு:—என்னதான் சங்கதி? என்னதான் நடந்தது.

மரகத:—அய்யோ! அந்த நன்றிகெட்டப் பெண். சண்டாளப்பெண். மீனும்பாள்......

பிரபு:—உன் கடைசிபுத்திரி. ஆம். அவளுக்கென்ன? என்ன சங்கதி.

மரகத:—"அய்யோ அவள், போய்விட்டாள், எங்கோ போய்விட்டாள், எங்களைவிட்டு ஓடிவிட்டாள்" என்று அழுதாள்.

பிரபு:—"அவளுக்குத் தைரியம் கூறி உன் துயரத்தை யடக்கிக்கொள். பொறுத்துக்கொண்டு, சற்று நிதானமாய் நடந்த சங்கதியைக் கூறு" என்று அவளைச் சாந்தப் படுத்தினர்.

அப்போது அம்மாது துக்கத்தை யடக்க முடியாமலே மிக்க தடுமாற்றத்தோடு சங்கதியைக் கூறினாள். அதன்படி பின்கண்ட சம்பவங்கள் நேர்ந்ததென்று தெரியவந்தது. அதாவது:—

மாகதவல்லியாகிய மூதாட்டி பிரபுவிற்கு எழுதிய கடிதத்தில் கூறியபடி தன் புத்திரிகள் நால்வரும் இளவரசியிடம் தோழிகளாய்ச் சென்று அங்கு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் இவர் அங்கு நிறைவேற்றவேண்டிய காரியம் இன்னதென்றும், அதற்காக இன்னவிதமாய் அவர்

கள் நடக்துகொள்ள வேண்டியதென்றும் நன்றாய்ப் போதித்து அவர்களை இளவரசியிடம் அனுப்புவதற்காக வில்வபுரம் என்ற துறைமுகநகருக்கு அழைத்துச் சென்றாள்.

கடைசி பெண்ணாகிய மீனம்பாள் தவிர மற்ற மூவரும் மிக்க உற்சாகத்தோடும் குதூகலத்தோடும் அதற்கு உடன் பட்டார்கள். வழியில் அவர்கள் மிக்க சந்தோஷத்தோடு சம்பாஷித்துக்கொண்டு வந்தார்கள். மீனம்பாள் அவர்களைப்போலவே தானும் சந்தோஷமாகவே யிருப்பதுபோல் மிக்க சாமர்த்தியமாய் அபிநயித்துக்கொண்டு வந்தாள்.

கடைசியில் இவர்கள் வில்வபுரம் வந்து சேர்ந்தபோது கப்பல் ஏறுவதற்குமுன் போஜனம் முடித்துக்கொள்வதற்காக ஒரு ஹோட்டலில் தங்கினார்கள். அங்கு இரண்டுமணி நேரம் இவர்களுக்கு அவகாசம் இருந்தது. இடையில் மீனம்பாள் ஏதோ சாக்குகூறித் தன் அறையில் இருந்து (ஹோட்டலில் மற்ற பாகங்களைப் பார்க்கச் செல்பவள் போல்) வெளிச் சென்றாள். அப்போதுதான் போஜனம் முடிந்தபடியால் மிக்க சந்தோஷத்தோடு சம்பாஷித்துக் கொண்டிருந்த மற்றபேர் அதைப்பற்றி யவ்வளவாய்க் கவனிக்கவில்லை. சற்றுநேரத்திற்குப்பின் கப்பலிலிருந்து ஒரு ஆள்வந்து கப்பல்புறப்படும் சமயம் நெருங்கிவிட்டது என்று மாகதவல்லியிடம் கூறினான். அப்போதுதான் யாவரும் மீனம்பாள் வெளியிற் சென்றதைக் கவனித்தார்கள். உடனே ஹோட்டல் முழுதும் தேடினார்கள். கடைசியில் அவள் ஹோட்டலைவிட்டு வெளியில் சென்றதாய்த் தெரிந்தது மூதாட்டிக்கும் அவள் மற்ற மூன்று குமாரத்திகளுக்கும் பெருங் கலவரமாய்விட்டது. அவள் எங்கு சென்றாள் என்றும் புலப்படவில்லை. புது ஊரில் எங்கென்று போய்த் தேடுவார்கள். அதோடு கப்பல் புறப்படும் சமயம் ஆய்விட்

டது. எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டபடியால் இவர்கள் அக்கப்பலிற் சென்றே தீரவேண்டும்.

இவ்வாறு இவர்கள் பெருங் கலவரத்தி லிருக்கையில் ஹோட்டலிலிருந்து வேலைக்காரி யொருத்தி மாகதவல்லியின் விலாசம் எழுதப்பட்டிருந்த ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து "அம்மா இது தங்கள் குமாரத்தியாகிய மீனும்பாள் இருந்த அறையில் மேஜைமேல் வைக்கப்பட் டிருந்தது" என்று கூறி அதை யவளிட மளித்தாள்.

மாகதவல்லி மேற்கண்டவரையில் நடந்த சம்பவங்களைப் பிரபுவிடம் கூறிக் கடைசியில் "இதோ அவள் எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடிதம். தாங்களே வாசித்துப் பாருங்கள்" என்று கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த கடிதத்தை யெடுத்துக் கொடுத்தாள். அக்கடிதத்தில் கீழ்க் கண்டபடி எழுதியிருந்தது:

"தாயாருக்கும் சகோதரிகளுக்கும், நான் உங்களைவிட்டுப் பிறிந்து போய்விட வேண்டியதா யிருக்கிறது. எனக்கு என்ன விஷயம் போதிக்கப்பட்டதோ அந்த விஷயத்தை நிறைவேற்றும் வழியில் உங்கள் கூடக் கலந்து நடந்து கொள்ளவேண்டுமென்று கடவு ளறிய என் மனதைச் சம்மதிக்கச்செய்ய எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்த்தும் என்னுல் முடியாமற் போயிற்று. அத்தொழிலை நினைக்கும் போதே வெறுப்பும் மனநடுக்கமும் உண்டாகிறது. அப்படிப்பட்ட சூதும், வஞ்சகமும், நம்பவைத்துக் கழுத்தறுக்கும் பெருந் துரோகமுமாகிய பாதகத் தொழிலைச் செய்ய உடன்படுவதைவிட நான் பன்முறை மிக்க குரூரமாகக் கொல்லப்படுவதற்கு ஒப்புக்கொள்வேன். இல்லை யில்லை. அப்படிப்பட்ட பெரும்பாதகச் செயலினின்றும் கடவுள் என்னைக் காப்பாற்றுவார். உங்களைவிட்டுப் பிறிந்துபோவ

தால் என் மனம் படும் நாகவேதனை கடவுளே யறிவார். ஆயினும் அப்படிப்பட்ட அநீதச்செயலை மனம் ஒப்பிச் செய்ய உங்களோடு நான் சேரமாட்டேன். கடவுள் உங்களை மன்னித்து ஆசீர்வதிப்பாராக. நான் உங்களை யொரு போதும் காட்டிக் கொடுக்கமாட்டேன். அந்தோ யென்னை யீன்ற மாதாவே கடவுள் இதினின்றும் உன் மனதைத் திருப்பலாகாதா! இதற்குமேல் எழுதக்கூடவில்லை.

இப்படிக்கு,
நிர்ப்பாக்கியவதியாகிய
மீனும்பாள்"

இக்கடிதத்தை வாசித்த பிரபு மூதாட்டியை நோக்கி, "இது அவகேடே! மிக்க அவகேடே! ஆயினும் அவள் உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டேன் என்று கூறுகிறுள். அவள் மனம் உங்கள் மேலுள்ள பாசத்தால் பிணிக்கப்பட் டிருக்கிறதென்பது நன்றாய் விளங்குகிறது. அப்பிணிப்பு அவளை யுங்களுக்குத் தீங்குசெய்யவிடாது. அதுமட்டுமல்ல; சீக்கிரத்திலேயோ கொஞ்சம் ஆலசியத்தின் மேலோ அவள் மறுபடி யுங்களிடம் வந்து சேர்த்துவிடும்படி யது செய் யும்" என்றார்.

அம்மொழிகளைக் கேட்ட மாகதவல்லி, "அந்தோ பிர புவே! என்மனம் உங்களைப்போல் அபிப்பிராயப்பட்டால் எனக்கு இவ்வளவு கலக்கமும் திகிலும் இராதே. அவள் இளவயதுடையவள், உலக அனுபவமே தெரியாதவள், மிக்க அழகுடையவள். கபடவஞ்சகாகிய போக்கிரிப்பயல் களில் எவனுவது அவள்மேல் காதல்கொண்டு அவளை வஞ் சித்துத் தந்திரமாய்ப் பேசி எல்லா இரகசியங்களையும் வெளி யிடும்படிச் செய்யக்கூடுமே யென்பதே யெனக்குப் பெருந் திகிலா யிருக்கிறது......" என்றபோது,

பிரபு:—"சம்பவிக்காத இடையூறை நேரிடுமென்று நாமே உத்தேசித்துக்கொண்டு வியாகூலப்படுவது அறிவின்மையாகும். அப்படியொன்றும் நேரிடாது. மனதை தைரியப்படுத்திக்கொள். என்னிடம் ஏதோ விசேஷ சங்கதி பேசவேண்டுமென்று உன் கடிதத்தில் எழுதியிருந்தாயே அதென்ன கூறு'' என்றார்.

மரக:—அந்தோ இப்பெண்ணின் செய்கையால் உண்டான கலவரத்தால் எல்லா விஷயமும் மறந்து போயிற்று. நான் கோரிவந்தது பணவிஷயம். இப்பெண்களை இளவரசியிடம் அனுப்புவதாக நான் அவர்களுடைய உடுப்புக்காகவும் நகைகளுக்காகவும் ஏராளமான பணம் செலவு செய்யவேண்டியிருந்தது தாங்கள் அறியாததல்ல.

பிரபு:—ஆம் ஆம். அதெல்லாம் எனக்குத் தெரியும். அந்த செலவைத் தான் கொடுப்பதாய் இளவரசியொத்துக் கொண்டிருப்பாளென்று நம்பியிருந்தேன்.

மரகத:—இராணி இரண்டாயிரத்து ஐந்நூறு சவரன்கள் வரையில் இது விஷயமாய் நான் செலவு செய்யும் பணத்தைத் தருவதாய் வாக்களித்திருக்கிறாள். இதற்காக ஐந்நூறு சவரன்கள் அனுப்பியிருக்கிறார்கள். நேற்று இளவரசியிடமிருந்து வந்த கடிதத்தில் மற்ற இரண்டாயிரம் பவுன்களுக்காக நான் கொஞ்ச காலம் பொறுக்கவேண்டுமென்றும், ஏனென்றால் தன் சொந்த சிலவிற்காக இருக்கும் பொக்கிஷத்தில் இப்போது கொஞ்சம் பணமுடையா யிருக்கிறதென்றும் தெரிவித்திருந்தாள். பிரபுவே! பணவிஷயத்தில் இளவரசியின் கையழுத்தம் நாம் நன்குணர்ந்ததே. தன்னால் கூடியவரையில் அப்பணத்தைக் கொடாமல் ஆலசியம்

செய்வாள். எனக்குப் பணமுடையால் மிக்க தொந்திர வாயிருக்கிறது. நகைக் கடைக்கு இருநூற் றைம்பது சவரன் தரவேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் பூரணமாக ஒவ்வொரு ஜதை நகைகளும் உயர்ந்த உடுப்புகளும் ஆயத்தம் செய்யவேண்டியதாயிற்று. உடுப்புகளுக்காக நூற்றைம்பது பவுன்........'' என்பதற்குள் பிரபு,

“ஆம் ஆம். எனக்கு விபரம் ஒன்றும் கூறவேண்டாம். நீ யிவைகளை யெல்லாம் வாங்கி யிருக்கிறாய் என்றும் அக்கடன்களைக் கொடுக்கவேண்டுமென்றும் எனக்குத் தெரியும். நீ யெனக்கு அத்தொகைக்கு ஒரு இரசீது கொடுத்துவிடு. நான் இளவரசியிடம் அதை வசூல் செய்து கொள்வேன். உனக்குக் கொடாமல் சாக்கு போக்கு கூறி யாலசியம் செய்வதைப்போல் என்னிடம் செய்யமுடியாது. நான் இரண்டாயிரம் பவுனுக்கு ஒரு செக் எழுதித் தருகிறேன்'' என்றார்.

மூதாட்டி:—“பிரபுவே! எனக்குவேண்டியது அவ்வளவே. நீர் எனக்கு உதவி செய்வீர் என்று நான் அறிவேன்'' என்று மிக்க வாஞ்சையோடு கூறினாள்.

பிரபு உடனே 2 ஆயிரம் பவுனுக்கு ஒரு செக் எழுதிக் கொடுத்தார். மாகதவல்லியும் அதற்கு ஒரு இரசீது எழுதிக் கொடுத்து விட்டு செக்கை வாங்கிக் கொண்டு பிரபுவிடம் விடை பெற்றுச் சென்றாள்.

மணி ஆறாய்விட்டது. பிரபுவின் பாடு கலவரமாய் விட்டது. ஏனெனில் தான் அன்று முழுதும் வீட்டில் காத்துக் கொண்டிருந்தது தன் நோட்புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு 2 ஆயிரம் பவுன்கள் பெற்றுக் கொண்டு போவதாய் வாக்களித்த பேர் ஊர் தெரியாத மனிதன்

அனுப்பும் ஆளுக்காகவே. அந்த விஷயமாய் ஒருவரும் இன்னும் வரவில்லை. அந்தப் புத்தகத்திலுள்ள கடிதங்களிலடங்கிய விஷயங்கள் வெளியில் வந்தால் மிக்க அவமானம் நேரிடும். ஏனெனில் அக்கடிதங்களில் சில உயர்குலச் சீமாட்டிகள் சுகசிங்கம் பிரபுவிற்கு எழுதிய கடிதங்களிருக்கின்றன. அவை பகிரங்கத்திற்கு வந்தால் அச்சீமாட்டிகள் மானம் கெட்டு பெருந் துன்பத்திற்காளாவார்கள். அதன்றி மரகதவல்லி தன் புத்திரிகள் இளவரசன் மனைவியிடம் செல்லும் விஷயமாக எழுதிய சில கடிதங்கள் இருக்கின்றன. அவை வெளியில் வந்தால் இளவரசனுடைய மானமும் மரியாதையும் அடியோடு போய் பெரிய அனர்த்தங்களுக்கு இடம் உண்டாய்விடும். அதுவுமன்றி இளவரசனே மேற்கண்ட விஷயங்களைப் பற்றி யெழுதிய சில கடிதங்களிருந்தன. அவை வெளி வந்தாலும் மிக்க அவமானமும் விபரீதங்களும் நேரிடும். ஆகையால் அப்புத்தகம் திரும்பி வரா விட்டால் மிக்க கெடுதிகளுக் கிடமாகு மென்பதால் பிரபுவுக்கு மிக்க கலவரமுண்டாய் விட்டது.

ஆயினும் மாலை ஆறுமணியே யாயிற்று. இன்னும் காலம் இருக்கிறது. அப்புத்தகத்தைப் பறித்துக் கொண்ட மனிதன் "புதன்கிழமை முழுமையும் நீ வீட்டிலிரு; இரண்டாயிரம் பவுன் சரியாய் ஆயத்தமாய் வைத்துக்கொண்டிரு. ஆலசியத்திற்கு இடந்தாமல் உனது கையிலேயே வைத்துக்கொண்டிரு. இப்புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுக்கும் ஆள் யாராயிருந்தாலும் புத்தகத்தை வாங்கிக்கொண்டு இதன்மேல் இப்போதிடப்பட்டிருக்கும் சீல் சரியாயிருக்கிறதா வென்று பார்த்துக்கொண்டு பணத்தை யவனிடம் கொடுத்தனுப்பிவிடு. வரும் ஆளைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்கலாம் என்றுவது வேறு ஏதாவது சதியாலோ சனையாவது சிந்தித்தாயோ பெரிய ஆபத்துக்குள்ளாவாய்"

என்று கூறியிருக்கிறான். புதன்கிழமை இரவு 12க்கு முடிவாகிறது. ஆகையால் அதுவரையில் அந்த ஆள் வரக்கூடும் என்று பிரபு தனக்குள் சிந்தித்துக்கொண்டு சற்று தைரியமடைந்தார்.

இவ்விதமாகச் சற்று நம்பிக்கை யடைந்து கடைசியில் போசனம் வட்டிக்கும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறே வட்டிக்கப் பட்டதே பிரபு மிக்க நிதானமாய் அருந்தத் தொடங்கினார். கடைசியில் மணி பத்தாயிற்று. பிரபுவுக்கு மிக்க கலக்க முண்டாயிற்று. "இத்துஷ்டர் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுக்கவே மாட்டார்களோ? அதிகபணம் கேட்பதற்காக வேணுமென்றே ஆலசியம் செய்கிறார்களோ? அல்லது மேலிருந்த அரக்கு முத்திரையை யுடைத்து விட்டு புத்தகத்தைத் திறந்து உள்ளிருக்கும் கடிதங்களை யெல்லாம் எடுத்து வாசித்துப் பார்த்து விட்டார்களோ" என்பது முதலிய பலவித கலக்கங்கள் பிரபுவின் மனதில் உண்டாயின.

பிறகு மணி பதினொன்றடித்தது; பிரபு எழுந்து போய் வீதியின் பக்கத்திலிருந்த சாளரத்தைத் திறந்து பார்த்தார். பிச்சைக்காரன் இன்னும் இருந்த விடத்திலேயே உட்கார்ந்துகொண் டிருக்கிறான். பிரபு "இவன் மட்டும் சலிக்காமலே யுட்கார்ந்திருக்கிறான், புதன்கிழமை முடிவாக இன்னும் ஒருமணி நேரமே யிருக்கிறது. ஒரு சமயம் இச்சமயத்தில் வந்தால் யார் கண்களுக்கும் புலப்படாமல் வந்து விடலாமெனக் கருதி வந்தாலும் வரக்கூடும்" என்று பிரபு நினைத்துக்கொண்டு ஆசனத்தில் வந்தமர்ந்தார்.

பிரபு பலவிதமான சிந்தனைகளில் இருக்கும் போதே மணி பனிரெண்டடித்து விட்டது. புதன்கிழமை போய் விட்டது. பிரபுவுக்கு அடக்க முடியாக் கோபம் உண்டாயிற்று.

"சண்டாளர்கள்! போக்கிரிப்பயல்கள்! கள்ளப்பயல்கள்! படுமோசக்காரர்கள்! குடிகேடர்கள்! அடியோடு மோசம் செய்து விட்டார்கள். நான் எடுத்துக்கொண்ட முன் ஜாக்கிரதைகளனைத்தும் விருதாவாயின. என் தந்திரங்களெல்லாம் வீணாய்ப் போய்விட்டன." என்று வாயில் வந்தபடி வைதுகொண்டே ஒரு பெரிய கிண்ணம் நிறையச் சாராயத்தை யூற்றி யருந்தினர்.

பிறகு "இனி காத்துக் கொண்டிருப்பது வீண்" என்று கூறிக்கொண்டே அறையை விட்டுச் செல்லப் புறப்பட்டார். அதற்குள் அங்கு கெட்டித்து வைத்திருக்கும் கைத்துப்பாக்கிகளை நினைத்துக் கொண்டார். தன் அந்தரங்க வேலைக்காரன் தீபங்களை யணைத்து விட்டு அறையை மூடும்போது இவைகளை யெடுக்காமல் மறதியாய் ஒருவேளை யங்கேயே விட்டு விட்டுப் போய்விடக்கூடும். பிறகு காலையில் அறையைச் சுத்திசெய்யும் வேலைக்காரர் இவைகளைக் கண்டால் என்ன விபரீத யோசனைகள் கொள்வார்களோ என்று நினைத்து புஷ்பத்தொட்டிக ளருகிற்சென்று ஒன்றில் இருந்த புஷ்பச்செண்டை யெடுத்து அதன் கீழிருந்த துப்பாக்கியை யெடுத்துக்கொண்டதே அத் துப்பாக்கிதான் கேசவநாதன் எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான் என்ற நினைப்பு வந்தது. பிரபு "அவன் இக்கெட்டித்த துப்பாக்கியைக் கண்டு என்ன எண்ணிக் கொண்டிருப்பான்? என்ன யோசனை செய்திருப்பான்? ஏதாவது விபரீதயோசனை செய்துகொண் டிருப்பானே? கிடக்கட்டும்; அவன் அபிப்பிராயத்தைப் பற்றி நமக்கு இலட்சியமில்லை" என்று சிந்தித்துக் கொண்டே இன்னொரு புஷ்பத்தொட்டியிலிருந்த புஷ்பச்செண்டை கையிலெடுத்துக் கொண்டு மறுபடி துப்பாக்கியை யெடுக்கக் கையை வைத்தார்.

உடனே திடுக்கிட்டார். ஏனெனில் கையில் ஒரு சிறு புத்தகம் தட்டுப்பட்டது. சட்டென்று ஆத்திரத்தோடு அதை யெடுத்துப் பார்த்தார். உடனே யுண்டான சொல்லொணு ஆச்சரியத்தால் சற்றுநேரம் அப்படியே பிரமித்து நின்று இது கனவோ, நினைவோ வென்று கலவரமடைந்து விட்டார். பிறகு நிதானித்து அறையைச் சுற்று முற்றும் நோக்கிவிட்டுப் புத்தகத்தை யுற்றுப்பார்த்தார்.

ஒரு சந்தேகமுமில்லை. இது தன் புத்தகமே. கள்ளன் கொண்டுவந்து கொடுத்துவிட்டு இரண்டாயிரம் பவுன் பெற்றுக் கொண்டு போகவேண்டிய புத்தகம் இதுவே. இதற்காகவே தான் அன்று முழுமையும் வீட்டில் காத்திருந்தது. அதன்மேல் தான் போட்ட அரக்கு முத்திரை யப்படியே யிருக்கிறது. ஆத்திரத்தோடு அதையுடைத்து புத்தகத்தைத் திறந்து பார்த்தார். உள்ளே தான் வைத்திருந்த கடிதங்கள் யாவும் அப்படியே யிருக்கின்றன. சட்டென்று தன் உட்சட்டையின் ஜேபியில் கைவிட்டு நோட் புத்தகத்தைக் கொண்டுவந்து தரும் ஆளுக்குக் கொடுப்பதற்காக நம்பர்களைப் பத்திரமாய்க் குறித்துக்கொண்டு தான் வைத்திருந்த நோட்டுகளை யெடுத்துப்பார்த்தார். அவை யப்படியே யிருக்கின்றன. அந்த இரண்டாயிரம் பவுன்களை வாங்கிக் கொள்ளாமலே புத்தகத்தை யாரோ கொண்டுவந்து அங்கு வைத்து விட்டுப் போயிருக்கிறுர்கள்.

இப்போது அவருக்குண்டான வியப்பை யிவ்வளவென்று நாம் கூறப்புகுந்தால் அசாத்தியமாகவே முடியும். இதை வாசிப்போரோ யொருவாறு சிந்தித்துக்கொள்ளலாம். தான் அங்கேயே யிருக்கையில் தன்னை யறியாமல் எப்படி ஒருவர் உள்ளே வந்திருக்கலாகும்? தானுவது தன்னைக் காணவந்த நால்வரில் யாராவது ஒருவராவது அந்த அறை

யில் இருந்துகொண்டே யிருந்தார்களேயன்றி ஒரு விநாடி கூட யாருமில்லாமலில்லை. இதென்ன அதிசயம். ஒருசமயம் தன் அந்தரங்கவேலைக்காரன் கள்ளனுக்கு உளவா யிருந் திருப்பானோவென்று நினைத்தார். அவனுக்கு அக்கள்ளன் எப்படித் தெரியும்? மேலும் அவன் நெடுநாளாயிருக்கும் மிக்க நம்பிக்கையுடைய வேலைக்காரன். அவன் ஒருகாலும் அப்படிச் செய்யான்.

மற்றபடி பின்னை யார்தான் அங்குவந்து அதை வைத் திருப்பார்கள். இதற்காகத்தான் அன்று முழுமைக்கும் நான்குதரம் ஐந்து ஐந்து நிமிடங்களே அந்த அறையைவிட் டுப் பணம் கொண்டுவர வெளியிற் சென்றிருக்கிறார். இந்த நான்கு சமயங்களில் வந்த நால்வரில் ஒருவர்தான் அங் கிருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இதைக் கொண்டு வந்து வைத்திருப்பார்களாவென்று சிந்தித்தார்.

தன் அந்தரங்க வேலைக்காரனையழைத்து "நீ துப்பாக்கி களைக் கொண்டு வைத்தபோது இந்தப் புத்தகம் பூத் தொட் டியில் இருந்ததா?" என்று கேட்டார். அவன் "இல்லை பிர புவே. எனக்கு நன்றாய்த் தெரியும். ஏனெனில் நான் முன் னாடி தொட்டிகளை நன்றாய்த் துடைத்து விட்டபின்பே துப் பாக்கிகளையும் அவற்றின்மேல் புஷ்பச்செண்டுகளையும் வைத் தேன்" என்றான்.

பிரபு சரி நீ உன் அறையிலேயே காத்திருக்கவேண்டிய வேலை அநாவசியமாய் விட்டது. உண்மை என்னவெனில் நான் நேற்று களவாடப்பட்டேன். என் கைப்புத்தகத்தைக் களவாடிக்கொண்ட கள்ளன் இன்று ஒருவர் வசம் அதை யனுப்பிப் பணம் பெற்றுக் கொள்வதாய்க் கூறினான். அவன் வந்து செல்லும்போது அவனைத் தொடர்ந்துசென்று அவன் இருப்பிடம் முதலியவற்றை யறிவதற்காக ஒரு போலீஸ் காரனை வீதியில் வைத்திருந்தேன். உன்னை யுன் அறையி

லுள்ள சாளரத்தின் திரையைத் தூக்கச்சொன்னது, அப் போலீஸ்கான் அச்சமயம் இங்கிருந்து வெளியிற் செல்லும் ஆளைப் பின் தொடரவேண்டும் என்ற குறிக்காக. இப்போது வேறு மார்க்கமாகப் புத்தகம் கைக்கு வந்துவிட்டது. நான் அரைமணி நேரத்தில் படுக்கைக்குச் செல்வேன். இனி நீ போகலாம்'' என்ருர்.

வேலைக்காரனுக்கு விவரமாய் ஒன்றும் விளங்காததால் அவன் அதிருப்தியோடும் வியப்போடும் சென்ருன். அதன் பிறகு பிரபு தன்னிடம் வந்து சென்ற நால்வரைப் பற்றியும் சிந்தித்தார். இவர்கள் நால்வரில் ஒவ்வொருவரும் சரியாய் இரண்டாயிரம் பவுன்களே, அதாவது புத்தகத்தை வாபீஸ் செய்யக் கள்ளன் பெற்றுக்கொள்ள வேண்டிய தொகையே வாங்கிக்கொண்டு போயிருக்கிருர்கள். இது ஒரு பெரிய வியப்பான சம்பவம்.

தன் சகோதரன் புத்திரனுகிய கேசவநாதன்மேல் அவருக்கு எவ்வளவு வெறுப்பிருந்தாலும் அவன் கள்ளரோடு சேர்ந்து இத்தகைய இழிவான தொழிலில் பிரவேசிப்பான் என்று சந்தேகிக்க மனம் இடந்தாவில்லை. தெய்வ யானையோ பெண்பால்; அவளைப்பற்றி அச்சம்பவத்தோடு சேர்த்துக் கருதவே அவர் மனமிசையவில்லை. அப்புறம் இருக்கும் பத்மாவதி மாகதவல்லி யென்ற இரண்டு மூதாட்டிகளோ அவர்களுக்கும் அக்கள்ளருக்கும் எப்படி சம்பந்தம் நேரிடும். மேலும் அவர்கள் இத்தகைய விவகாரங்களில் ஒருபோதும் தலையிடத் தக்கவர்களல்ல.

பிரபு படுக்கையில் சயனித்துக்கொண்டே இதைப் பற்றி யோசித்துக் கடைசியில் ஒன்றுமே விளங்காமல் இரவு முழுமையும் அதைப்பற்றியே கலவரமாய்க் கனவு கண்டுகொண் டிருந்தார்.

—

18 - வது அத்தியாயம்.

புதன்கிழமை மேல்கண்டபடி சுகசிங்கம் பிரபுவுக்குப் பெருங்கலவரத்தில் முடிந்தது. இதே தினம்தான் கர்னல் மாரப்பன் மதனவல்லியிடம் தனக்காக முயற்சி செய்யவேண்டிய முறை.

அன்றையதினம் மாலை 5-மணிக்கு மதனவல்லி தன் வீட்டில் என்ன செய்கிறுள் என்று பார்ப்போம்.

அவள் ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறுள். அவள் எதிரில் ஒரு பெரிய நிலைக்கண்ணுடி யிருக்கிறது. ஒரு மாது அவளுக்கு ஆடையாபரணங்களை யணிந்து அலங்காரம் செய்துகொண் டிருக்கிறுள். இன்னெரு அழகிய யௌவன மாது அவள் எதிரில் உட்கார்ந்துகொண் டிருக்கிறுள்.

அலங்காரம் செய்துகொண்டிருக்கும் மாதின்பெயர் ஜெயதேவி. அவள் மரியாதையர்ன குடும்பத்தைச் சேர்ந்தவள். நல்ல குடும்பங்களோடு சம்பந்தப்பட்டவள். நாகரீகமும் நாணயமுமுடையவள். அவளுக்கு வயது சுமார் 50 இருக்கும். பத்மாட்சி அவளுடைய புத்திரி. சுமார் 25 வயதுடையவள். அழகிய மாது. இதுகாறும் ஒரு சுற்றத்தாரிடமிருந்து இப்போது தன் தாயிடம் வந்திருக்கிறுள்.

மதனவல்லிக்கு ஆடையாபரணங்கள் யாவும் அணியப் பட்டதே தோழியும் அவள் புத்திரியும் அவள் வனப்பைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறினுர்கள்.

ஜெயதேவி பார்வைக்கு நாணயமான பெரிய மனுஷி போலவும் யாவர்க்கும் உதவிபுரியும் குணமுடையவள்

போலவும் இருக்கப்பட்டவள். மிக்க சுறுசுறுப்பாகவே எப்போது மிருப்பவள். வீட்டில் யாவர்க்கும் முன் எழுந்து அந்தந்த வேலைகள் நடக்கப்பார்த்து இரவில் யாவர்க்கும் கடைசியில் வீடுமுழுதும் பார்த்து ஜாக்கிரதையாய் மூடி விட்டுச் சயனத்திற்குச் செல்வாள். வேலைக்காரர் சற்றுவது வீண்காலம் போக்காதபடி பார்த்துக்கொள்வாள். அப்படி யிருந்தும் வேலைக்காரர் தன்மேல் வெறுப்படையாவண்ணம் மிக்க ஜாக்கிரதையாய் நடந்துகொள்வாள். சமயோசிதப்படி முகஸ்துதி செய்வதில் தேர்ந்தவள். தந்திரம், சூது, கபடம் முதலியவற்றிலும் நல்ல பயிற்சியுடையவள். ஆனால் மனப்பூர்வமாய் துரோகம் நன்றியற்றதனம் முதலிய குணங்களை யுடையவளா அல்லவாவென்று கூறுவது கஷ்டம். அவள் மதனவல்லியின் வனப்பைப்பற்றி புகழ்ந்து கூறும் போதெல்லாம் அவள் புத்திரியும் அதை யாமோதிப்பாள். மதனவல்லியிடம் அவள் வந்து கொஞ்சகாலமேயாயினும் மதனவல்லிக்கு அவள்மேல் நம்பிக்கையும் அன்பும் உண்டாய் விட்டது.

அன்று வாதநாயகிச் சீமாட்டியென்ற ஒரு செல்வச் சீமாட்டியின் வீட்டில் பெரிய விருந்து நடக்கிறது. அம்மாது மிக்க மரியாதையானவள். தான் முதிர்ந்த வயதிலிருந்தாலும் பாலியர்கள் சந்தோஷமாய் இருக்கப் பார்ப்பதில் மிக்க திருப்தியுடையவள் ஆகையால் அச்சீமாட்டி அப்போதைக் கப்போது விருந்து, தோட்டவிருந்து, உல்லாசக் கச்சேரி முதலிய வேடிக்கைகளைப் பணச்செலவைக் கருதாமல் தன் மாளிகையில் நடத்துவதுண்டு.

ஜெயதேவி அச்சீமாட்டிக்கு அதிக அறிமுகமானபடியால் மதனவல்லிக்கும் அன்று நடக்கும்விருந்து கேளிக்கை முதலியவற்றிற்கு ஒரு அழைப்புச் சீட்டு வரும்படி செய்

தாள். மதனவல்லி தான் வெளியில் செல்லும்போதெல்லாம் ஜெயதேவியையும், அல்லது அவளையும் அவள் புத்திரியையும் கூட தன்னோடு அழைத்துப் போவது வழக்கம். அதுபோலவே, அன்றும் வாதநாயகிச் சீமாட்டியின் வீட்டில் நடக்கும் விருந்துக்கு மூவரும் புறப்பட்டார்கள்.

வாதநாயகிச் சீமாட்டி மிக்க செல்வ முடையவள். ஆகையால் அன்று மிக்க ஆடம்பரமாய் மாளிகை முழுமையும் மிக்க அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மாளிகையைச் சேர்ந்த தோட்டம் முழுதும் பட்டப்பகற்போல் பிரகாசிக்கும்படி பல நிறங்களையுடைய தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன.

மதனவல்லியும் ஜெயதேவி பத்மாட்சி மூவரும் அம் மாளிகையின்முன் தங்கள் வண்டியைவிட் டிறங்கியதும் வாதநாயகிச் சீமாட்டி வந்து மிக்க உபசாணையோடு மாளிகைக்குள் அழைத்துச் சென்றாள். மதனவல்லியின் அபூர்வமான வனப்பைக் கண்டதே அச்சீமாட்டி மிக்க சந்தோஷமடைந்தாள்.

மதனவல்லி உள்ளே சென்றதே எங்கும் பெருங் கிளர்ச்சி யுண்டாய்விட்டது. ஏனெனில் அவள் வனப்பு யாவருடைய மனதையும் கவர்ந்துகொண்டது. அனேகம் வாலிபர் அவளுடைய அறிமுகத்தைப் பெறவேண்டுமென்று ஆவல் கொண்டார்கள். கர்னல் மாரப்பனும் அந்த விருந்திற்கு வந்திருந்தான். அவன் வாதநாயகிச் சீமாட்டிக்கு மிக்க அறிமுகமானவன். அதனால் மதனவல்லியைத் தனக்கு அறிமுகமாக்கி வைக்கும்படி வேண்டிக்கொண்டான். அச்சீமாட்டி "ஆகா. அவர்களோடுகூட புருடர் ஒருவரும் வாராதவரையில் மதனவல்லியை யுன் காவலில் ஒப்பிவைக்கிறேன். நீ அவள் மனதிற்குத் திருப்தியாய் நடந்துகொள்வா யென்று நம்புகிறேன்" என்றாள்.

கர்னல் மாரப்பன்:—"அதைப்பற்றித் தாங்கள் சந்தேகப் படவேண்டாம்" என்றான்.

சீமாட்டி யவனை யழைத்து வந்து மதனவல்லியை நோக்கி "நான் உன்னை யிவர் வசம் ஒப்பிக்கிறேன்" என்று கூறி இருவரையும் அறிமுகமாக்கி வைத்தாள். அச்சமயம் ஜெயதேவியும் பத்மாட்சியும் முன்னேயிருக்கும் ஒரு பூஞ் செடியைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

கர்னல் மாரப்பன் தனக்கு அறிமுக மாக்கப்பட்டதே மதனவல்லியின் முகத்தில் ஒருவித வெறுப்பும் கோபமுமான குறி தோன்றியது. மாரப்பன் முகத்தில் ஒருவிதமான அகங் காரத்தோடுகூடிய திருப்தியும் சந்தோஷமுமாகிய குறி யுண் டாயிற்று.

ஜெயதேவியும் பத்மாட்சியும் சற்று தூரம் முன்னே போய்க் கொண்டிருந்தார்கள். மதனவல்லியும் கர்னல் மாரப் பனும் பின்னே நடந்தார்கள். இவர்கள் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நுழைந்து உலாவிக்கொண்டே சென்றார்கள்.

கர்னல் மாரப்பன் மதனவல்லியை நோக்கி "இது மிக்க ஆனந்தமே. உண்மை யானந்தம். நான் என்றைக்கு மடை யாத ஆனந்தம். அதிலும் எதிர் பாராமலிருக்கையில் திடீ ரென்று கிடைத்ததால் இது அளவு கடந்த ஆனந்தத்தைத் தருகிறது" என்றான்.

இவன் கூறியது தான் மதனவல்லியைச் சந்தித்ததைப் பற்றியே. ஆனல் அவளோ அதை யப்படி யுணராதவள் போல, "ஆம் ஆம். மிக்க ஆனந்தமான இடம். மனத்திற்கு ஆனந்தத்தை யுண்டாக்கும் வண்ணம் இவ்வளவு அழகாக வும் இனிமையாகவும் அலங்காரம் செய்யப்பட்ட இடத்தை நான் இது காறும் கண்டதேயில்லை. இதைத் தேவலோக நந்தவனம் எனலாம்." என்றாள்.

மாரப்:—"அழகிய மாதரே அழகின் குணத்தை யறியத் தக்கவர்கள்" என்றான். இதுவும் அவன் அவளைக் குறித்து கூறியதே. மதனவல்லியோ அதையும் அப் படி கருதாதவள் போலவே,

"நீர் கூறுவது உண்மையே; வாதநாயகிச் சீமாட்டி யௌவன வயதில் மிக்க வனப்புடைய மாதாகவே யிருந் திருப்பார்க ளென்பதில் சற்றும் சந்தேகமே யில்லை. ஆகை யால் இதில் ஒன்றும் அதிசயம் இல்லை" என்றாள்.

இவ்வாறு மதனவல்லி சற்றும் இடந்தாமலே, சிநேக பாவமாய் நெருங்க வழி விடாமலே பேசுவதைக் கேட்ட மாரப்பனுக்கு மிக்க மனக்கலக்கமும் கோபமு முண்டா யிற்று. இவள் சுபாவமே யிவ்வாறு, அல்லது ஏதாவது காரணத்தைக் கொண்டு வேணுமென்றே இப்படி தட்டிப் பேசுகிறாளா என்பதை யறிய வேண்டுமென்று அவள் முகத் தை உன்னிப்பாய்ப் பார்த்தான். அவள் முகமோ முன் போலவே ஒரேவிதமா யிருக்கிறது; அதனால் இவன் ஒன் றும் அறிந்துகொள்ள முடியவில்லை. மறுபடி யவளைநோக்கி,

"நான் கூறுவதன் கருத்தை நீ யறிந்துகொள்ளவே யில்லை. அது கிடக்கட்டும். உன்னிடம் வேறொரு விஷயத் தைப்பற்றி பேச விரும்புகிறேன்" என்றான்.

மதனவல்லி:—தடையென்ன? பெரிய மனிதராகிய ஆடவர் கள் முதல் முதல் ஒருவரைச் சந்தித்தால் எப்போதும் சீதோஷ்ணத்தையும் காலசுகத்தையும் பற்றிதான் பேசு வது வழக்கம்.

மாரப்பன் பின்னும் மன எரிச்சலடைந்து "பேஷ், இது மிக்க நேர்த்தியே. ஆடவர் விஷயத்தில் நீ உண்மை யாகவே மிக்க குரூரமா யிருக்கிறாய். நீ கூறுவது உண்

மையே. நாங்கள் முதலில் காலநிலையைப்பற்றி பேசுவது உண்மையே. நீ கூறுவது நியாயமே'' என்றான்.

மதனவல்லி:—''ஆனவரையில் நான் நியாயவாளியென்று ஒப்புக்கொள்கிறீரல்லவா'' என்றாள்.

மாரப்பன்:—''ஆயினும் நான் அப்படி சர்வசாதாரணமான விஷயங்களைப்பற்றியே பேசும் ஆடவரில் சேர்ந்தவ னல்லவென்று தெரிவிப்பதற்காக நான் பேச முயன்ற விஷயத்தைப்பற்றி கூறத் தொடங்குகிறேன்'' என் றியம்பிவிட்டு அவள் விடைக்கு எதிர் பார்ப்பவன் போல் தோன்றினான்.

மதனவல்லியோ ஒரு பதிலும் கூறவில்லை. அவள் முகத்தைப் பார்த்தான். அவள் முகக்குறியால் அவள் தான் கூறும் விஷயங்களை யிலட்சியம் வைத்துக் கேட்பவளாய்த் தோன்றவில்லை. அவன் அவளை நோக்கி, ''இப்படிப்பட்ட வேடிக்கையான காட்சிகளின் மத்தியில் உன் மனதைக் கவ ரத்தக்க எந்தவிஷயத்தைப்பற்றியாவது நான் சம்பாஷிக்க முடியாதென்று நீ கருதுகிறாய் போலும். என்னுடைய அதிட்டவசத்தால் உனக்கு நேராய் சம்பந்தப்பட்ட ஒரு இரகசியமான விஷயம் என் செவிகளி லெட்டி யிருக்கிறது'' என்றான்.

மதனவல்லி யுடனே முகம் சிவந்து ''என்னைப் பற்றிய ஒரு இரகசியமா ?'' என்றாள்.

மாரப்பன் தன் குரலைத் தாழ்த்தி ஏதோ மிக்க இரகசிய மான ஒரு மர்மசங்கதியைக் கூறுபவன்போல், ''ஆம் ஆம். உன்னைப்பற்றிய இரகசியமே. உனக்கு விரோதமாய் நடக் கும் ஒரு துஷ்ட ஆலோசனை'' என்றான்.

மதன:— "நீர் கூறுவது எனக்குள் ஒன்றுமே விளங்க வில்லை" என்று கடுத்த முகத்தோடு கூறினுள்.

மாரப்பன் வேணு மென்றே மெதுவாய் நடந்ததால் முன்னே செல்லும் ஜயதேவியும் பத்மாட்சியும் சுமார் 30, 40 கெஜதூரம் முன்னே செல்ல நேர்ந்தது.

மாரப்பன் ஏதோ மிக்க நம்பிக்கையுள்ள சினேகன் போலும் ஒரு பெரிய மர்மத்தைப்பற்றி கூறுபவன்போல்:— "இப்போது உனக்கு விரோதமாய் நடக்கும் அச்சதியா லோசனையைப்பற்றிய விவரத்தை நான் கூறுகிறேன். ஆனல் நீ முன்னுடி எனக்கு ஒருவாக்குத் தத்தம் கூறவேண் டும். ஹா எங்கோ ஆள் இருப்பதுபோல் செடிகளில் சல சலவென்ற சத்தங் கேட்கிறது" என்ருன்.

மதனவல்லி "என் செவிகளில் எவ்விதமான சந்தேக ஒலியும் கேட்கப்படவில்லை. அப்படி யாராவது ஒத்துக் கேட்டுக்கொண்டிருந்தாலும் அதைப்பற்றி எனக்கு அவசிய மேயில்லை. ஏனெனில் நீர் ஏதோ நம்பிக்கையோடு என்னி டம் வெளியிடப் போவதாய்க் கூறும் இரகசியத்தைப்பற்றி நான் உம்மைக் கூறும்படி சற்றேனும் கோரிக்கொள்ள வில்லை" என்ருள்.

மாரப்:—என்னுடைய உண்மையான சினேகத்தன்மையை நான் ருசுப்படுத்தக்கூடும். நீ மட்டும் தயவு செய்து சற்று பொறுமையோடு நான் கூறும் விஷயங்களைக் கேட்டால், பிறகு நீயே யதைப்பற்றி தீர்மானித்துக் கொள்ளக்கூடும்.

மதனவல்லி அப்போதும் அலட்சியமாய்க் கேட்பவள் போலவே "கூறும் கூறும்" என்ருள்.

மாரப்:—நீ முன்னுடி நான் கூறுவதை யாருக்கும் வெளி யிடுவதில்லையென்று வாக்களிக்கவேண்டும்.

மதன:— அப்படி வாக்களிப்பதாலேயே அந்த விஷயத்தை நான் நம்பிக்கையோடு கூறப்பட்ட ஒரு பெரிய ரகசிய சமாசாரம் என்று மதிப்பதாய் ஏற்படும். நான் என்ன மோ அப்படி மதிக்கவில்லை.

இம் மொழிகளைக் கேட்டதே மாரப்பனுக்கு அடக்க முடியாத கோபமும் மனக்குழப்பமும் உண்டாய் விட்டது. முதலில் அவள் தன்னை யொரு நம்பகமான சினேகனென் றும் தன்மேல் அன்புவைத்துப் பிறர் தனக்கு விரோதமாய்ச் செய்து கொண்டிருந்த சதியாலோசனையை, அவர்கள் தன் நண்பர்க ளென்பதைக்கூட மதியாமல், நம்மிடம் வந்து கூறிவிட்டானென்றும் மதிக்கும்படி செய்ய வேண்டுமென் பதே அவன் கருத்து. ஆனால் அவளோ மனதில் என்ன கருத்து கொண்டோ தான் சினேக பாவமாய் நெருங்கு வதற்குச் சற்றும் இடங்கொடாமல் நிர்த்தாட்சணியமாய்ப் பேசுகிறாள். அதனால் அவன் கொடிய குணங்கள் மேல் கிளம்பத்தொடங்கின. ஆயினும் மறுபடி யவற்றை மெது வாய் அடக்கிக்கொண்டான். முன்னமே யவள்மேல் அவ னுக்கு வெறுப்புண்டாய் விட்டது. வஞ்சத்திற்காவது அவளை யெப்படியும் தன் பிரியப்படி யிணங்கச் செய்ய வேண்டுமென்ற ஒரு வைராக்கியங் கொண்டான். அதைப் பற்றி தாங்கள் அறுவருக்குள் பந்தயம் ஏற்பட்டிருப்ப தால் தான் ஜெயித்தால் கௌரவமடைவதோடு பந்தயப் பணம் ஆறுயிரம் பவுன்களையும் பெறலாம் என்பது அவ னுடைய நோக்கம். ஆகையால் அவன் மறுபடி மதன வல்லியை நோக்கிச் சாந்தமாகவே,

"ஆயினும் நான் கூறப்போகும் விஷயத்தின் விவ ரத்தை நீ கேட்டால் அப்போது அது நம்பிக்கையாய்க் கூறப்பட்ட இரகசியமென்று கருதுவாயென்றும், அப்புறம் அதை இரகசியமாகவே வைத்துக் கொள்ள வேண்டுமென் றும் தீர்மானித்துக் கொள்வாயென்று நம்பியே அதைக் கூறத் தொடங்குகிறேன்" என்று அவள் முகத்தை நோக் கிச் சற்று நிதானித்தான்.

மதனவல்லியோ அதை யாவலோடு கேட்கப் பிரியப் படுகிறவள்போல் தோன்றவேயில்லை. ஏதோ அலட்சியத் தோடு கூறட்டும் என்று மௌனமா யிருப்பவள் போலவே தெரிகிறது. மாரப்பன் பேசாமல் சங்கதியைக் கூறத் தொடங்கி,

"நான் முன்னமே கூறியபடி உனக்கு விரோதமாய் ஒரு சதியாலோசனை நடந்துகொண்டிருக்கிறது. அது உண்மை யென்று நான் பூரணமான அத்தாக்ஷிகளோடு உனக்குக் காட்டுகிறேன். இப்போது நான் கூறப்போவதைக் கேட்டுத் திடுக்கிடாதே. அச்சதியாலோசனைக்குக் காரணம் உன்னுடைய அபூர்வ வனப்பே. உன் வனப்பைக்கண்டு உன் மேல் காதலுற்ற சில இழிகுணவான்களாகிய காமாதுரர்கள் உன்னைப்பற்றி தங்களுககுள் பந்தயம் போட்டுக்கொண்டார் கள். அது எப்படியோ தெய்வசங்கல்பமாய் என் செவிகட் கெட்டியது. நான் இதை யுனக்கறிவித்து உன்னை யெச்ச ரிக்கை செய்யவேண்டும் என்று கருதினேன். இதில் இன் னொரு விசேஷம். அவர்களனைவரும் என்னுடைய நெருங் கிய சினேகிதர்கள். அவர்கள் சினேகத்தை விட்டு நான் நீங்கி விட முடியாது. ஆனால் நீ யிதை யொருவருக்கும் கூறாமல் பரம இரகசியமாய் வைத்துக்கொண்டு இது விஷ யத்தில் நான் உனக்குக் கூறும் ஆலோசனைகளின்படி

நடந்து கொள்வாயேல்.........ஆ! அதோ மறுபடியும் அச் சத்தம். வலது பக்கம் அதோ இருக்கும் செடிகளில் யாரோ இருக்கிறார்களென்று நிச்சயமாய்க் கூறுவேன்'' என்றான்.

மதனவல்லி:—"என் மனதிலும் அவ்வாறே தோன்றிற்று. ஆயினும் இப்போது, உமக்குத் தொந்திரை யுண்டாக் கத்தக்கதாக ஏதோ இரகசியத்தை நீர் என்னிடம் கூறி னாலும், அதைக் கூறும்படி நான் உம்மைக் கேட்டுக் கொள்ளவில்லை யென்ற உண்மையை நீர் மறக்கலா காது'' என்றாள்.

மாரப்பன் சற்று மன நடுக்கத்தோடேயே "ஆ! நீ உறத்துக் கூறுவதைப் பார்த்தால், அப்படி உண்மையாகவே யாரேனும் அச்செடிகளில் மறைந்திருந்தால், நீ கூறுவது அவர்கள் செவிகளில் கேட்கவேண்டும் என்ற எண்ணத் தோடேயே கூறினாற்போல் காண்கிறது'' என்றான்.

மதனவல்லி மறுபடி யவன் மனதிற்கு விஷமூட்டுவது போல் அவனை நோக்கி அசட்டையாகவே,

"அய்யா! நான் மறுபடி யுமக்குக் கூறுகிறேன், சம்பா ஷிப்பதற்கு வேறு விஷயங்கள் கிடைக்காததால் வேடிக்கை யார்த்தமாய்த் தாங்கள் இப்போது கூறிய கட்டுக்கதையை யான் ஒரு பொருளாய்ச் சற்றேனும் மதிக்கவே யில்லை யென்று உறுதியாய்க் கூறுகிறேன்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே மாரப்பன் சற்றுமுன் யாரோ செடிகளில் மறைந்திருந்து தான் கூறும் சங்கதிகளை யொத்துக் கேட்கிறார்கள் என்று கலவரமடைந்ததை யடி யோடு மறந்து நடுக்கமான குரலாய் மதனவல்லியைநோக்கி,

"அப்படியானால் இப்போது நான் கூறிய சங்கதி உண் மையாய் நடக்கவில்லை யென்றா நீ கருதுகிறாய்?'' என்று கேட்டான்.

மதனவல்லி நேராய் அவன் முகத்தை ஏறெடுத்து நோக்கிக்கொண்டே, "அய்யா! இப்போது நான் என் மனதி லுள்ளதை யெள்ளளவும் மறைக்காமல் மனம்விட்டு என் அபிப்பிராயத்தைக் கூறிவிடுகிறேன். யாரோ சிலர் என்மேல் இச்சைவைத்து அக்கிரமமாய்ச் சதியாலோசனை செய்து கொண்டு என்னைப்பற்றி தங்களுக்குள் பந்தயம் போட்டுக் கொண் டிருக்கிறார்களென்று கூறுகிறீர். நீரே அவர்கள் இழிகுணமுடைய காமுகர்களென்று அவர்களைத் தூஷிக்கி றீர். அதேவாக்கால் அவர்கள் அனைவரும் உம்முடைய நெறுங்கிய சினேகிதர்களென்றும் இதற்காக அவர்கள் சினேகத்தை விட்டுவிடமுடியாதென்றும் கூறுகிறீர். இப் போது நான் என்ன கருதக்கூடும்? ஒன்று, தாங்கள் அவர் கள் எதிரில் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்குச் சம்ம தித்தே யிருக்கிறீர். அவர்கள் பின்னால் அதற்காக அவர் களைத் தூஷிக்கிறீர். ஆகையால் ஒன்று, அவ்வாறு பந்தயம் போட்டுக்கொண்டவர்களில் நீரும் ஒருவரா யிருக்கவேண் டும்; அல்லது நம்பிய சினேகரைக் காட்டிக்கொடுக்கும் சினே கத்துரோகியா யிருக்கவேண்டும். எப்படிபார்த்தாலும் நீர் யோக்கியமான பெரிய மனிதர் என்ற அபிப்பிராயம் என் மனதில் நிலைத்திருக்கக் காணமில்லை. ஆகையால் நான் நேராய் உம்மேல் அவ்வாறு குற்றம்சாட்டிக் கூறுவதற்குப் பதிலாக நீர் இப்போது கூறிய சங்கதிகள் யாவும் என்னிடம் வேடிக்கையார்த்தமாய்ப் பேசுவதற்காக உம்முடைய சாது ரியமான புத்தியால் உண்டாக்கப்பட்ட கட்டுக்கதையென்றே நான் மதிக்கிறேன்" என்றாள்.

அச்சமயம் மாரப்பன் மனதில் எவ்வித சிந்தனையுண் டாயினும் அதை மறைத்துக்கொண்டு மதனவல்லியை நோக்கி, "ஆ! நான் உன்னிடம் நம்பிக்கைவைத்துக் கூறிய

தற்கும், நான் கொண்ட நல்லெண்ணங்கட்கும், நீ கூறுவது நேர்விரோதமான பிரதிபலன்'' என்றான்.

மதன:— "நான் என்னிடம் இரகசியம் கூறும்படிக்கும் உம்முடைய நம்பிக்கையை நிரூபிக்கும்படிக்கும் உம்மைக் கேட்கவில்லை. உம்முடைய நல்லெண்ணத்தையோ நான் அடியோடு நம்பவேயில்லை'' என்று திட்டமாய்க் கூறினாள்.

இதைக்கேட்ட மாரப்பன் இனித் தன் துர்க்குணங்களைக் காட்டாமல் அடக்கிக்கொள்ள முடியாமல் கடுகடுப்போடு அவளை நோக்கி,

"நீ யென்னை விரோதியாக்கிக் கொள்வதைவிட சினேகிதனாக்கிக் கொள்வது நலம்'' என்றான்.

மதனவல்லி உடனே இரண்டெட்டு அப்புறம் பின்னிட்டு கடுகடுத்த முகத்தோடு அவனை நோக்கி,

"நீர் இத்தகைய மொழிகளைப் புகல்வதாயின் நான் உடனே வாதநாயகிச் சீமாட்டியிடம் சென்று அவள் பாதுகாப்பைக் கோரிக் கொள்வேன். உம்மால் இம்மாதிரி நான் நடத்தப்பட வேண்டுமென்று கருதி அந்தம்மாள் உம்வசத்தில் என்னையொப்பித் திருப்பார்களென்று நான் நினைக்கவில்லை'' யென்றாள்.

மாரப்:— நீ யுன்னைப்பற்றிக் குழப்ப முண்டாகும்படி இடந்தரமாட்டாய் என்று எனக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் இப்போதே என் உண்மையைக் கூறி விடுகிறேன் கேள். நான் உன்னை எப்படியாவது இணங்கச் செய்வதென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். இப்போது என் முயற்சி முழுமையும் அதற்காகவே செலுத்துகிறேன். நல்லவழியிலோ கெட்டவழியிலோ

என் காரியத்தை யெப்படியாவது சாதித்தே தீருவேன்' சற்றும் ஈவிரமில்லாத பரமசண்டாளன் போல் நடந்து கொள்வேன். என் குணத்தை நானே கூறி விடுகிறேன். நான் உன் பெயரை யடியோடழித்து விடுவேன். நீ யென் வைப்பாட்டியாயிருக்கிருய் என்று இரகசியமாய்ச் சிலரிடம் கூறி யாவரும் நம்பும்படி செய்வேன். இது மட்டுமல்ல, நீயெனக்குக் கடிதங்கள் எழுதியதாய்ப் பொய் கையொப்பம் வைத்து நீ யெழுதுவது போலவே யெழுதி யாவரும் நம்பும்படி செய்வேன். நீ பரிசுத்தமான கற்பரசியாகவே யிருந்தாலும் நீ கற்பிழந்தவளே யென்று யாவரும் நம்பும்படிச் செய்துவிடுவேன். ஆகையால் இன்று முதல் 14 நாட்கள் உனக்கு வாயிதா கொடுக்கிறேன். இன்று புதவாரம். இதற்கு இரண்டாவது புதவாரம் பகல் 12 மணிக்குள் உன்னிடமிருந்து அனுகூலமான பதில் வராவிட்டால் உடனே சற்றும் ஈவிரக்கம் பாராமல் எள்ளளவு தாட்சணியமுமின்றி என் யுத்தத்தைத் தொடங்கி விடுவேன்.'' என்று கூறிவிட்டுத் தன் கரங்களை மார்மேல் மடித்துக்கொண்டு அவள் எதிரில் நின்றான். அவன் முகம் சவம் போல் வெளுத்திருந்தது. அவன் தன் செய்கையால் தானே கலவரமும் திகிலும் அடைந்திருக்கிறான் என்று நன்கு விளங்கியது.

இவன் அஞ்சாது கூறிய மிக்க அக்கிரமும் அவகேடுமாகிய பயமுறுத்தும் மொழிகளை மதனவல்லி எவ்வாறு ஏற்றுக்கொண்டாள் என்று பார்ப்போம்.

இவன் மொழிகளைக் கேட்கக்கேட்க அவளுக்கு முதலில் வெறுப்பும், பிறகு கோபமும், அதன் பிறகு மிக்க வியப்பும்,

மிக்க அலட்சியமும் உண்டாயிற்று. கடைசியில் அவனை நோக்கி,

"நான் நேராய் வாதநாயகிச் சீமாட்டியிடம் சென்று நீர் கூறிய வார்த்தைகளை, ஒவ்வொன்றையும் விடாமல் அப்படியே கூறினாலோ?" என்றாள்.

மாரப்:—இல்லை நீயொருபோதும் அப்படிச் செய்யவே மாட்டாய். பயங்காளியாகிய கோழை ஸ்திரீயாயிருந்தால் அப்படிச் செய்வாள். நீ யோசனையும் தைரியமும் உடையவள். நீ யப்படிச் செய்யமாட்டாய். அதோடு நீ கூறினால், இதுகாறும் என்னைப்பற்றி யவர்களறிந்த வரையில், நீ கூறுவதை நம்பமாட்டார்கள்......

மதன:—போதும், அய்யா போதும். உமது உண்மையான குணாதிசயங்களைப் பூரணமாய் வெளியிட்டதற்காக மிக்க வந்தனமளிக்கிறேன். நான் ஒரு ஸ்திரீயாகவேயிருந்தாலும், எனக்குப் போதுமான தைரியமிருக்கிறது. உம்முடைய கடூரமொழிகளையும் அக்கிரமமான மொழிகளையும், வீண்மிரட்டல்களையும் எவ்வாறு மதிக்க வேண்டுமோ அவ்வாறே மதிக்க எனக்குத்தெரியும். தைரியமுமுண்டு. அதாவது உமது வார்த்தைகளனைத்தையும் நான் மிக்க அலட்சியமாய் மதிக்கிறேன். ஆகையால் என்னைப்பற்றி பேச்சு நடக்கும்படி நான் பிரியப்படமாட்டேன் என்று நீர் கருதியது உண்மையே. மேலும் யாவரும் வேடிக்கையாக சந்தோஷ மனுபவித்துக்கொண் டிருக்கையில் அதற்கு எவ்வித இடையூறும் செய்ய எனக்குப் பிரியமில்லை. ஆகையால் நாம் இனி பேசுவதற்கு நியாயமில்லை. இருவரும் உடனே பிரிந்து போகவேண்டும். நான் முன்னே செல்லும் என் நண்பர்களிடம் போய்ச்சேர்ந்து

கொள்ளச் செல்கிறேன். நீர் இந்த வழியே செல்லும்'' என்று கூறிவிட்டு நடந்தாள்.

மாரப்:—"நான் கூறியது தவறுமென்று நினைக்காதே. அலட்சியமாய்க் கருதாதே. எனக்கு இணங்கிவிடு. இன்றேல் நான் கூறியபடி நடப்பது உண்மையென்று நினைத்துக்கொள்'' என்றான்.

மதனவல்லி யம்மொழிகளைச் சட்டை செய்யாமலே நடந்தாள்.

மாரப்பன் கோபத்தோடும் வெறுப்போடும் அவளை நோக்கி விட்டுத் திரும்பிச்சென்றான். அவன் நடந்து கொண்ட அக்கிரமும் தகாததுமாகிய நடக்கைகளால் உடனே அவன் மனதில் பீதியும் கலவரமு முண்டாய்விட்டன.

இதற்கிடையில் முன்னே சென்ற ஜெயதேவியும் பத்மாட்சியும் சற்று தூரத்தில் ஆசனம் அமைத்து ஒரு மேஜை போட்டு அதன்மேல் சிற்றுண்டிகளும் பலவித மதுபானங் களும் வைக்கப்பட்டிருந்த ஒரு விடத்தில் போய் உட்கார்ந் தார்கள்.

மதனவல்லி மாரப்பன் சென்றதே துரிதமாய்த் தன் நண்பர்க ளிருக்கு மிடத்திற்குச் செல்லப் புறப்பட்டாள். ஆனால் அச்சமயம் சமீபத்தில் எங்கோ சல சலவென்ற சத்த முண்டாவதைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்று நாற்புறமும் பார்த்தாள்.

அங்கிருந்த செடிகளை விலக்கிக்கொண்டு பலம் பொருந் திய ஒரு மனிதன் அவள் எதிரில் வந்து நின்றான்.

மதனவல்லி திடுக்கிட்டு மனம் தெளிந்து ஏதாவது கூறு வதற்குள், அம்மனிதன், "அம்மா பேச வேண்டாம்

நான் இங்கு அனுமதியில்லாமல் வந்திருக்கிறேன். அம்மனி தன் கூறிய வார்த்தைகள் யாவும் ஒன்று விடாமல் கேட்டுக் கொண் டிருந்தேன். எப்போதாவது இதைப்பற்றி சாட்சி கூறவேண்டுமாயின் எனக்கு ஒரு வார்த்தை யெழுதி யனுப்பினுல் உடனே வந்து உனக்கு உதவி செய்வேன்'' என்றுன்.

மதனவல்லி "எனக்கு இத்தகைய உதவி செய்யும் தாங்கள் யாரோ யெனக்குத் தெரியவில்லையே'' என்றுள்.

அம்மனிதன்:—"அம்மா! சாவகாசமாய்ப் பேச எனக்கு முடியாது. இதோ இச்சீட்டில் என் விலாசமிருக்கிறது; இவ் விலாசத்திற்கு ஒரு வரி யெழுதினுல் உமக்கு நான் வந்து உதவி செய்வேன். இதற்காக நான் எவ்விதக் கைம்மாறும் எதிர் பார்க்கவில்லை'' என்று கூறியதும் தன் பெயரும் விலாசமும் அச்சடிக்கப்பட்ட ஒரு சீட்டை யவள் கையிலளித்துவிட்டு உடனே அங்கிருந்த செடிகளில் நுழைந்து மறைந்து போய்விட்டான்.

மதனவல்லி மிக்க வியப்படைந்து அச்சீட்டை வாசித்துப் பார்த்ததும் சந்தோஷமடைந்து, அதைப் பத்திரமாய்த் தன் மடியில் வைத்துக்கொண்டு தன் நண்பர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றுள்.

19 - வது அத்தியாயம்.

இதற்கிடையில் மாளிகையில் நடனமும், தோட்டத்தில் ஒருபக்கம் பாணவேடிக்கையும் நடந்துகொண்டிருந்தது. மதனவல்லியும் ஜெயதேவி முதலியவர்களும் வேடிக்கை நடக்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

வாதநாயகிச் சீமாட்டி மதனவல்லியைக் கண்டதும் 'ஆ! நான் உன்னைக் கர்னல் மாரப்பன் வசம் ஒப்பித்தேனே. நீ யேன் தனியாய் இருக்கிறாய்? அனேகம் வாலிபர் உன்னோடு நடனம் செய்ய மிக்க ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள்" என்றாள்.

மதனவல்லி:—"மிக்க வந்தன மளிக்கிறேன். எனக்கு என்னமோ திடீலென்று உடம்பு ஒருமாதிரியா யிருக்கிறது. சீக்கிரத்தில் நான் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குச் செல்ல நினைத்துக்கொண் டிருக்கிறேன். கர்னல் மாரப்பனும் நானும் ஜன சந்தடியில் எப்படியோ பிரிந்து விட்டோம்'' என்றாள்.

வாதநாயகிச் சீமாட்டி "வேடிக்கைகளெல்லாம் இப்போதுதான் ஆரம்பமாகின்றன. நீ கொஞ்சநேரமாவது இராமல் இப்போதே போய்விட்டால் எனக்குத் திருப்தியாயிராது'' என்று கூறிவிட்டு, ஜெயதேவியை நோக்கி, "நீயும் உன் புத்திரியும்கூட மதனவல்லிக்குக் கூறி இன்னும் சற்று நேரமாவது இருந்து என்னைக் கௌரவப்படுத்தும்படி கோருகிறேன்'' என்றாள்.

அச்சீமாட்டி யவ்வளவு கூறியபின் நிற்காமல் போய்விடுவது மரியாதையல்லவென்று மதனவல்லி கருதினாள்.

அதோடு பத்மாட்சி நிற்கப் பிரியப்படுவதுபோல் தோன்றி யது. இவர்கள் போய்விடாமல் தங்கியதை யுணர்ந்த வரத நாயகிச் சீமாட்டி மிக்க சந்தோஷ மடைந்தாள். அதன் பிறகு மாளிகையில் ஒருபுறம் நடனமும், ஒருபுறம் பாண வேடிக்கையும் நடந்தது.

அந்த வேடிக்கைகள் நடந்த பிறகு யாவரும் விருந் தருந்த உட்கார்ந்தார்கள். விருந்து மிக்க நேர்த்தியும் அரு மையுமானதென்று நாம் கூறவேண்டுவது அநாவசியமே.

கடைசியில் யாவும் முடிந்து மதனவல்லி, ஜெயதேவி, பத்மாக்ஷி மூவரும் வரதநாயகிச் சீமாட்டியிடம் விடைபெற் றுக்கொண்டு புறப்படும்போது அச்சீமாட்டி மதனவல்லியை நோக்கி "குழந்தாய் இதுமுதல் நீ யென்னைச் சாதாரணமாய் அறிமுகமானவர்களில் ஒருத்தியென்று கருதலாகாது. என் பிரிய மிகுந்த சிநேகியாய்க் கருதவேண்டும். இனி என் வீட்டில் என்ன நடந்தாலும் நீ கட்டாயம் வந்தே தீர வேண்டும். இன்று என் விருந்தினர் சபைக்கு நீயே நடுநாயக மாய்ப் பிரகாசித்தாய்" என்று மிக்க அன்போடு கூறியனுப் பினாள். மதனவல்லி தோட்டத்தில் கர்னல் மாரப்பனை விட் டுப் பிரிந்தது முதல் அவன் விருந்து நடந்த மாளிகையில் எங்குமே காணப்படவில்லை.

ஆகையால் மதனவல்லி மீதிகாலத்தைச் சந்தோஷ மாகவே கழித்துவிட்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

* * * * *

* * * *

நேயர்களே நாம் கோமளவல்லியை ஒரு புதுவிடத்தில் மிக்க மனவருத்தமான நிலைமையில் விட்டிருக்கிறோமன்றூ. இப்போது அவள் விஷயத்தைக் கவனிப்போம்.

மேற்கண்டபடி விருந்து நடந்த அதே புதவாரம் இரவு சுமார் பதினேரு மணிக்குக் கோமளம் வெளுத்த முகத்தோடும் பெருந்திகிலடைந்து சொல்லொணு வேதனையை யனுபவித்துக்கொண் டிருக்கும் மனதோடும் உட்கார்ந்து கொண்டிருந்தாள். முன்இரவே யவள் அங்கு அக்கிரமமாய்க் கொண்டுவந்து வைக்கப்பட்டது. புதவாரம் பகல் முழுதும் தனக்கு ஆகாரம் கொண்டுவந்து கொடுக்கும் அம்மூதாட்டியைத்தவிர வேறு ஒருவரையும் அவள் காணவில்லை. அவள் அப்போதும் ஆகாரம் கொண்டுவந்திருக்கிருள். அந்த ஆகாரமோ உயர்ந்த அந்தஸ்தி லிருக்கப் பட்டவர்கள் அருந்தத் தக்க ஆகாரமே. யாவும் வெள்ளித்தட்டுகளில் பரிமாறப் பட்டிருந்தன.

மதனவல்லியோ காலையிலிருந்து எவ்வித ஆகாரமும் அருந்த வில்லை. அன்று பகல் மதனவல்லிக்கு ஏதாவது வேண்டுமாவென்று கேட்பதற்காகப் பலதரம் அறைக்குள் வந்தாள். ஒவ்வொருதரம் வரும்போதும் மதனவல்லி ஏதாவது தகவல் கேட்டால் அவள் பதில் கூற மறுத்துவிடுவதேயன்றி எள்ளளவு தகவலும் கூறுவதில்லை. அப்போது ஆகாரம் கொண்டுவந்து வைத்து விட்டு அதை யருந்தும்படி மதனவல்லிக்குச் சமாதான மொழிகளைக் கூறினுள்.

மதனவல்லி யதற்கொரு பதிலும் கூறாமலே "நான் எங்கிருக்கிறேன்? யார் என்னை யிங்கு கொண்டுவந்து சிறை வைத்திருப்பது? ஏன் வைத்திருக்கிருர்கள்? இவைகளைக் கூறு. இன்றேல் என்னை வெளியில் விட்டுவிடு. இல்லாவிட்டால் நான் கூடியசிக்கிரத்தில் சகிக்கமுடியாத துயரத்தால் மடிவேன் அல்லது எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்" என்ருள்.

எவ்வளவோ துயரத்தோடு கோமளம் கேட்ட அக்கேள்விகளுக்கு அம்மாது "நீ யிங்கு எதற்கும் பயப்பட வேண்டிய காரணமேயில்லை. உனக்கு ஒரு கெடுதியும் நேரிடாது. நான் உன் கேள்விகளுக்குப் பதில்கூறமுடியாது. நீ கலவரப்படுவதை விட்டு நிம்மதியான மனோ நிலைமையையடைந்தால் எல்லா விபரமும் தெரியவரும்" என்றாள்.

அவள் தனக்கு ஒன்றும் கூறமாட்டாள் என்று தெரிந்ததே கோமளம் "நான் தனியேயிருக்கவே பிரியப்படுகிறேன். நீ போய் வரலாம்" என்று கூறி அவளை யனுப்பிவிட்டாள். இப்போது நாம் அவள் இருக்கும் அறையின் அமைப்பைப் பற்றி சற்று கவனிப்போம்.

அந்த அறை நன்றாய் அலங்கரிக்கப்பட் டிருந்தாலும் சிறிய அறை யென்றும் சுவர் முழுமையும் தடித்த பச்சை நிறத் திரைச் சீலை விடப்பட்டிருந்த தென்றும் மட்டும் முன்னமே கூறியிருக்கிறோம். சற்று கவனித்து திரையின்மேல் கையை வைத்தழுத்தினால் பின்னால் உள்ள சுவரின் சுபாவப்படி கடினமாய்த் தட்டுப்படாமல் மிக்கமிருதுவான உணர்ச்சியே தோன்றும். ஏனெனில் திரையின் பின்னுள்ள சுவரின் மேல்புறம் முழுமையும் அரையங்குல கனத்திற்கு, கம்பளி உரோமங்கள் ஒட்டவைக்கப்பட்டிருந்தன. அவை ஒன்றோடொன்று நெருங்கிப் பொருந்தி கடித அட்டைபோல் இருக்கும்படி செய்யப்பட்டிருந்தன. இது என்னத்திற்குச் செய்யப்படுவதெனில் உள்ளிருந்து உண்டாகும் எவ்விதசத்தமும் வெளிச் செல்லாமலிருப்பதற்கும், வெளியிலிருந்து எவ்வித சத்தமும் உள்ளே வாராதபடிக்கும் தடுப்பதற்காகவேயாகும்.

இதனால் உள்ளிருப்பவர்கள் என்ன கூச்சலிட்டாலும், கதறியழுதாலும், கோவென்றலறினாலும் வெளியில் சற்

றும் கேட்காது. வெளியில் மனிதர் பேசும் சத்தம் வண்டிகள் செல்லும் சத்தம், மணியடிக்கும் ஓசை யெதுவுமே உள்ளே யிருப்பவர்களுக்குக் கேட்காது.

கோமளம் படுத்திருக்கும் மஞ்சத்திற்கு எதிர்பக்கம் இருக்கும் சுவர் ஓரமும் தடித்ததிரையே விடப்பட்டிருந்தது. அதை நீக்கிப் பார்த்தபோது அங்கு ஒரு சாளரம் இருந்தது. அச்சாளரம் பக்கத்திலிருந்த இன்னொரு அறையைப் பார்த்தபடி யிருந்ததேயன்றி வெளியான இடத்தைப் பார்த்தபடி யில்லை. அது காலி யறை. அதில் வெளிச்சம் வருவதற்காக அதன் மேல் தளத்தில் வட்டமாய் உயர்ந்த குழாய் கட்டி அதன் அடிப்பக்கமும் மேற்பக்கமும் தடித்த கண்ணாடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

இதனால் கோமளம் இருக்கும் அறையிலிருந்து எந்தச் சத்தமும் வெளிசெல்லாம லிருப்பதற்கும், வெளியிலிருந்து எச்சத்தமும் உள்ளே வராமலிருப்பதற்கும் மிக்க சாக்கிரதையாகப் பூரணமான ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறதென்று நன்குவிளங்கியது. மேற்கண்ட குழாயின் வழியாய் வரும் மங்கலான வெளிச்சந்தான் சாளரத்தின் வழியாய் கோமளத்தின் அறைக்குள் செல்லக்கூடும்.

இதுமட்டுமல்ல. அவள் இருக்கும் அறைக்கு ஒன்றின் பின்னால் ஒன்றாய் இரண்டு கதவுகளிருக்கின்றன. உட்பக்கமிருக்கும் கதவின் பின்னும் சுவரில் ஒட்டப்பட்டிருப்பது போலவே கம்பளி உரோமங்கள் ஒட்டப்பட்டு அதன்மேல் தடித்த திரை விடப்பட்டிருந்தன. அம்மூதாட்டி அதை மூடிப் பூட்டிக்கொண்டபின் சற்றுதூரம் சென்றதும் இன்னொரு கதவு மூடிப் பூட்டப்படும் சத்தம் தன் செவிகளில் கேட்கப்படுவதால் இரண்டு கதவுகளிருக்கின்றனவென்று கோமளவல்லி தெரிந்துகொண்டாள்.

கோமளம் அன்று பகலில் மேல்கண்ட விஷயங்களை யெல்லாம் கண்டறிந்ததுமுதல் மிக்க திகிலும் கலவரமு மடைந்தாள். தான் கூச்சலிடவும், அலறி யழவும் நேரிடக் கூடிய அத்தகைய கொடூரமான இம்சைகளெல்லாம் தனக்குச் சம்பவிக்கும்போ லிருக்கிறதென்று அவள் மனதிற் றோன்றியது. ஒரு விவரமும் தெரியாததாலேயே அவள் பீதி மிக்க அதிகமாயிருந்தது. யார் தனக்கு இந்தத் தீங்கு செய்ததென்றே தோன்றவில்லை. எவ்வித சத்தமும் கேட்காதபடியால் சந்தேகமாய்க் கூடத் தான் இருப்பது இன்ன விடமென்று தோன்றவில்லை. ஆதலால் யாவும் அவளுக்குப் பெருங்குழப்பமும் திகிலுமாகவே யிருந்தது.

அவளுக்கு உலக அனுபவம் சற்றேனும் தெரியாது. கொஞ்சமும் மாசில்லாத உள்ள முடையவள். துஷ்டச் செயல்கள் இன்னவை யென்றே தெரியாது. ஆகையால் ஒன்றுமறியாத கன்னியர்களின் கற்பை யழிக்கும் காமுகர்களாகிய பரம துஷ்டர்கள் தங்கள் இழிவான இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்காக எத்தகைய கொடுஞ் செய்கைகளைச் செய்யத் துணிவார்கள் என்பது அவளுக்குக் கொஞ்சமும் தெரியாது.

அன்று பகல் முழுவதும் பெருங்கலவரத்திலும் திகிலிலும் துயரத்திலும் கழிந்தபின், நாம் முன் கூறியபடி இரவு வந்தபோது மூதாட்டி ஆகாரம் கொண்டுவந்து வைத்துவிட்டுத் திரும்பிச் செல்லும்போது "மணி பதினொன்றாய் விட்டது. சீக்கிரம் சாப்பிடு" என்று கூறிச் சென்றாள். அதனால்தான் அப்போது பதினோரு மணியாயிற்றென்று கோமளத்திற்குத் தெரிந்தது.

மேஜைமேல் ஒரு தீபம் எரிந்துகொண் டிருக்கிறது. கோமளம் ஆகாரத்தில் கைவைக்கவேயில்லை. அவள் முகம்

சவம் போல் வெளுத்திருந்தது. கண்கள் வெறி கொண்டவள் கண்கள்போ விருந்தன. கலவரமும் பீதியும் சொல்ல முடியாது. திடீரென்று நாம் இங்கிருந்து எப்படியேனும் தப்பித்துக்கொண்டு ஓடிவிட வேண்டும் என்ற ஒரு நினைப்பு உதித்ததும் சற்று தைரியமும் சுறுசுறுப்பும் நம்பிக்கையும் உண்டாயின.

"எவ்வாறு இப்பயங்கரமான விடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு போகலாம்? மார்க்கம் எங்கிருக்கிறது?" என்று சிந்தித்துக்கொண்டே யிருக்கையில், மிக்க அந்தகாரமான அடவியில் கன்னங் கரிய ஆழ்ந்த இருளன்றி வேறொன்றும் புலப்படாதிருக்கையில் திடீலென்று எங்கோ மினுக்கென்று ஒரு ஒளி தோன்றினால் எவ்வாறிருக்குமோ, அதுபோல் சிலவாரங்களுக்கு முன் நகர உத்தியானவனத்தில் தான் சுகானந்தன் என்ற குருவைச் சந்தித்ததும் அப்போது நேர்ந்த சம்பவங்களும் அவள் மனதில் திடீலென்று உதித்தன. அப்போது அவன் நடந்துகொண்ட மாதிரியை நினைத்தபோது தனக்கு நேர்ந்துள்ள இந்த இக்கட்டிற்கும் அதற்கும் சம்பந்த மிருக்குமோவெனச் சந்தேகமுண்டாயிற்று.

ஆனால் முதலில் அது அசம்பாவிதம் என்று கருத முயன்றாள். ஏனெனில் மரியாதையான குரு பதவியிலுள்ளவன் துணிகரமாய்த் தனக்கு மிக்க அவமானத்தையும் கெடுதியையும் உண்டாக்கத்தக்க இத்தகைய விபரீத நடத்தைக் குட்படுவானோவென்று கருதினாள்.

ஆயினும் சிந்திக்கச் சிந்திக்க அவன் தன்மேல் அதிக காதல்கொண்டு அன்று நடந்துகொண்ட மாதிரியைக் கருத அவனே யிப்படிச் செய்தவன் என்ற அபிப்பிராயமே மனதில் நிலையாய் நிற்கத் தொடங்கியது. அவள் உள்ளத்தி

விருந்தே யாரோ அவன் செய்கைதான் என்று கூறுவது போல் அவள் மனதிற்குப் புலப்பட்டது.

இவ்வளவு விஷயம் மனதில் புலப்படவே அவளுடைய பெருந்திகிலும் குழப்பமும் ஒருவாறு குறைந்தன. அவள் தன் கபடமற்றதும் களங்கமற்றதுமான சுபாவப்படியே குரு தன்மேல் அதிக காதல் கொண்டபடியால் நம்மைப் பல வந்தப்படுத்தியேனும் மணம் செய்து கொள்ள முயற்சி செய்யப்போகிறுன் என்று கருதிக்கொண்டாளே யொழிய மற்றபடி தனக்கு வேறு எவ்விதக் கொடுமையாவது தீங் காவது அக்கிரமமாவது செய்யக்கூடுமென்று அவள் சற் றேனும் கருதவில்லே. ஆனல் நாம் நெடுநாள் இங்கேயே சிறைவைக்கப்பட் டிருக்கலாகும் என்றுமட்டும் கருதினள். தன் காதலனுகிய ஜெகதீசனை நினைக்க, இவ்வளவு விஷயமே அவள் மனதிற்குச் சகிக்கொணு வேதனையா யிருந்தது.

இதிலிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டும் என்ற எண்ணம் இப்போது முன்னிலும் அதிகமாய்விட் டது. தைரியமும் நம்பிக்கையுங்கூட உண்டாயின. தன் முயற்சியில் தவறிவிட்டாலும் இப்போதிருக்கும் ஆபத்திற்கு மேல் அதிகமா யொன்றும் நேரிடப்போகிறதில்லேயென்று தீர்மானித்துக்கொண்டு அறை முழுமையும் மறுபடி நன் ருய்ச் சோதிக்கத் தொடங்கினள்.

சுவரின்மே லிருக்கும் கம்பளி உரோமங்களேக் கவன மாய்ப் பார்த்தபோது அவள் மனதில் தட்டென்று ஒரு விஷயம் புலப்பட்டது. அதாவது சத்தம் வெளிச் செல்லா திருக்கவும் உள்ளே வராதிருக்கவும் இக்கம்பளி காரணமா யிருப்பதால் இதை யெடுத்துவிட்டால் நாம் 'ஒருசமயம் சத்தமிட்டாலும், வெளியில் செல்வோர்க்குக் கேட்கும்;

அப்போது தெய்வகதியாய் யாரேனும் நமக்கு உதவி வந்தாலும் வரக்கூடும் என்று அவள் மனதிற் புலப்பட்டது.

உடனே அப்படியே செய்வதென்று தீர்மானித்துக் கொண்டாள். அவள் ஆகாரம் அங்கேயே வைக்கப்பட்டிருந்ததென்று முன்னமே கூறியிருக்கிறோம். அதில் பழ வர்க்கங்களும் இருந்ததால் அவற்றை யரிய ஒரு கத்தியுமிருந்தது. கோமளம் அக்கத்தியை யெடுத்துக் கொண்டு அதனுல் சுவரின் மேல் ஒட்டப் பட்டிருக்கும் கம்பளியை யறுத்தெடுக்க முயன்றாள். அது அவ்வளவாய்க் கஷ்டமான வேலையாய்த் தோன்றவில்லை. ஆகையால் சற்று நேரத்திற்குள் அறையின் ஒரு பக்கச் சுவரின் கீழ்ப்பாக முழுமையும் இருந்த கம்பளியை யறுத்தெடுத்து விட்டாள். அறை முழுவதும் கம்பளி உரோமங்களும் தூசும் நிறைந்து விட்டன. அவளுக்கு அதிக தாக முண்டாயிற்று.

உடனே கொஞ்சம் ஜலம் அருந்திப் பத்து நிமிடங்கள் வரைச் சற்று இளைப்பாறி யிருந்து, பிறகு தன் படுக்கையின் பின் இருந்த சுவரின் மேலுள்ள கம்பளியை யறுக்கத் தொடக்கினுள். சற்று நேரம் வேலை செய்தபோது அந்த விடத்தில் சுவரில் ஒரு கதவு புலப்பட்டது.

அதைக்கண்டதே கோமளவல்லிக்குச் சந்தோஷமுண்டானதோடு இதை விட்டுப் போய்விடக் கடவுள் வழிகாட்டுவார் என்ற நம்பிக்கையும் அதிகமாயிற்று. உடனே தீபத்தை யெடுத்துவந்து அக்கதவை நன்ருய்க் கவனித்தாள். அது அடைக்கப்பட்டு பூட்டு போடப்பட்டிருந்தது. பூட்டு இந்தப் பக்கமே யிருந்தாலும் பூட்டில் சாவியில்லை. கதவு அவ்வாறு பூட்டப்பட்டிருந்தாலும் அதைத்திறக்க அவள் மனதில் ஒரு தந்திரம் உதித்தது. அதாவது அப்பூட்டையே யடியோடு

கழற்றிவிட ஒரு வழி தோன்றியது. உடனே தன்னிட மிருந்த கத்தியினுல் பூட்டு தைக்கப்பட்டிருக்கும் மரையாணி களைக் கழற்றி விட்டதும் பூட்டு அடியோடு கழன்று வந்து விட்டது. கதவைத்திறக்க முயன்றதும் ஒரு கஷ்டமு மின்றி கதவு திறந்து கொண்டது. ஆனுல் கத்தியினுல் மரை யாணிகளைக் கழற்றியபோது அவள் கரத்தில் பலவிடங்களில் காயம் பட்டது.

அவள் பூட்டைக் கழற்றியதும் மணியடிக்கும் சத்தம் கேட்டது. ஒத்துக்கேட்டாள். 12 மணி யடித்தது. அதோடு அந்த மணியடிக்கும் மாதிரியால் அது கந்தபுரியிலுள்ள பெரிய கோயிலில் அடிக்கும் மணி யென்று தெரிந்தது.

இதனுல் தான் அடைக்கப் பட்டிருப்பது கோயிலுக் கருகிலுள்ள சுகானந்த சுவாமி யென்னும் குருவின் வீடே யென்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. அதோடு சுவர் களின் மேலிருக்கும் கம்பளிகள் எடுக்கப்பட்டால் உள்சத்த மும் வெளியிலிருப்பவர்களுக்கு நன்ருய்க்கேட்கும், வெளிச் சத்தமும் உள்ளிருப்பவர்களுக்கு நன்ருய்க்கேட்கும் என்று தெரிந்து விட்டது. உடனே அவ்வழியாய் மிக்க ஜாக்கிரதை யோடு சென்ருள். உடனே அது அவ்வீட்டின் மேல் தளம் என்று தெரிந்தது. அவ்வழியே சென்றபோது கடைசியில் ஒரு முரட்டுத்தனமானப டிக் கட்டுகள் கீழ் நோக்கிச் சென் றது. கோமளம் மிக்க எச்சரிக்கையோடு அவ்வழியே சென்ருள்.

அப்படிகளின் அடியில் சென்றபோது, அங்கு மூன்று அறைகளின் கதவுகள் இருந்தன. ஆனுல் யாவும் மூடப் பட்டிருந்தன. கீழ்க்கட்டில் வீடு முழுமையும் நிர்ச்சந்தடி யாயிருந்தது. அதைவிட்டு நேராய்ச் சென்ருள். அதைக்

கடந்து இன்னெரு கூடத்திற்குச் சென்றதே அங்கும் அம் மாதிரியே மூன்று கதவுகளிருந்தன. அந்த மூன்றறை களில் ஒன்றிலிருந்தாவது ஒருவித சந்தடியும் வரவில்லை.

அக்கூடத்தில் ஒரு பெரிய சாளரம் இருந்தது. கோம ளம் அங்கு நின்று சாளரத்தின் வழியாய் பார்த்தாள். அங் கிருந்து பார்த்தபோது எதிரில் கறுத்த ஒரு பெரிய கட்டி டம் புலப்பட்டது. கோமளம் அதைக்கண்டதே அதுதான் அவ்வூர் கோயிலின் ஒரு பக்கம் என்று தெரிந்து கொண் டாள். உடனே அவள் மனதிலிருந்த கொஞ்சனஞ்ச சந் தேகமும் அடியோடு நீங்கிவிட்டது. சுகானந்த சுவாமியே நம்மைக் கொண்டுவந்து தன் வீட்டில் வைத்திருக்கிருன் என்று நிச்சயம் செய்து கொண்டாள்.

கோமளம் அங்கிருந்து திரும்பிப் படிகளின் வழியாய்க் கீழ் இறங்கினுள். கீழேதான் வேலைக்காரர் முதலிய யாவரும் இருப்பது. அந்நேரத்தில் யாவரும் நித்திரையி லிருப்பார்க ளென்று நம்பக்கூடியதாயினும் அங்குதான் வெளிச்செல்ல வழியிருக்குமோவென்று உள்ளே பெரிய சந்தேகமே.

கீழே யிறங்கியதும் அங்குள்ள ஒரு அறையிலிருந்து தீபப்பிரகாசம் வெளியில் வீசிக்கொண்டிருப்பதைக் கண்ட தும் அவள் பேரிடிவிழுந்தவள்போல் ஆய்விட்டாள். அவள் தேகம் நடுங்கிவிட்டது. ஆயினும் மனதைத் தைரியம் செய்துகொண்டு சற்றேனும் சந்தடி செய்யாமல் பூனை போல் நடந்துபோய் மெதுவாய் அறைக்குள் எட்டிப் பார்த் தாள்.

உள்ளே சுகானந்தன் ஒரு மேஜையின் எதிரில் உட் கார்ந்துகொண்டு ஏதோ வாசித்துக்கொண் டிருக்கிருன். மேஜைமேல் வெள்ளிக் கிண்ணங்களும், பலவகை யுயர்ந்த சாராயங்களும் பழங்களும் பலகாரங்களும் வைக்கப்பட்

டிருந்தன. கோமளம் எட்டிப்பார்த்த பக்கம் அவன் முதுகை வைத்துக்கொண் டிருந்ததால் அவன் அவளைக் காணவில்லை. கோமளம் உடனே சட்டென்று தாழ்வாரத் தில் மறைந்துகொண்டாள் சமீபத்தில் வீதிக்குச் செல்லும் வழி யிருக்கிறது. சற்று சிந்தித்துப் பார்த்தாள். கடைசி யில் துணிந்து செல்வதே சரி எனத் தீர்மானித்துக் கொண்டு குனிந்தபடி தாழ்வாரத்தின் வழியேசென்று வீதி யில் பிரவேசிக்கும் வாசற்படியை யடைந்தாள்.

அந்தோ அது மூடிப் பூட்டப்பட்டிருந்தது. சாவி பூட்டில் இல்லை. மறுபடி பேரிடி விழுந்தவள்போல் ஆய் விட்டாள். மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு சமையல் கட்டின்வழியே மெதுவாய்ச் சென்றாள். தன் அறையி லிருந்த தீபத்தைக் கையிலேயே யெடுத்துக்கொண்டு செல்வ தால் வழியறிந்துசெல்ல மிக்க அனுகூலமா யிருந்தது. சில சமயம் தீபத்தைக் கையால் மறைத்துக்கொண்டும் சில சம யம் சற்று முன்னே பார்ப்பதற்காக தீபத்தை உயரத்தூக் கிப் பிடித்துக்கொண்டும் சென்றாள். சமையற்கட்டின் பல பாகங்களில் பார்த்தும் எங்கும் வழி யகப்படவில்லை.

ஆட்கள் யாவரும் நித்திரைசெய்துகொண் டிருக்கிறார் கள் என்றுமட்டும் தெரிந்தது. கடைசியில் ஒரு கூடத்தில் பிரவேசித்தாள். அங்கு மேல்மாடிகளுக்குச் செல்லும் படிக ளிருந்தன. அக்கூடத்தின் கோடியிலிருந்த கதவு பூட்டப்பட் டிருக்கவில்லை. கோமளம் அதைத்திறந்து மறுபக்கம் சென்று மூடிக்கொண்டு நாலைந்தடிகள் கடந்ததும் அச்சந்துபோன்ற விடத்தில் இன்னொரு கதவிருந்தது. அதைத் தாண்டியதும் அந்த வீட்டின்பின்னுள்ள முற்ற மிருந்தது. முற்றத்திற் கப் புறம் கோயிலின் பின் பக்கமுள்ள கல்லறைகளின் முடிவான எல்லையிருக்கிறது. அப்பாகத்தில் சிலவிடங்களில் சாளரக்

கம்பிகள் பெயர்க்கப்பட்டும் சுவர் இடிந்துபோய் சந்துகளும் இருப்பதால் அவ்வழியே உள்ளே நுழைந்து விடலாம். இவையாவும் கோமளம் அறிவாள்.

அவள் முற்றத்தின் கதவைத்திறந்து வெளியில் அடியெடுத்துவைக்கும் சமயம் முன்னேயிருக்கும் கூடத்தில் யாரோ நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்டதும் மிக்க திகிற்பட்டு மரம்போல் நின்றாள். மறுநிமிடம் அவள் திகில் நீங்கியது. ஏனெனில் அங்குவந்த ஆள் மேல் மாடிக்குச் செல்ல அக்கூடத்திலிருக்கும் படிகளின்மேல் ஏறுகிறான் என்றும் அவன் சுகானந்தனே யென்றும் தெரிந்தது. அவன் வாயால் என்னமோ கூறிக்கொண்டே செல்வதால் கோமளம் கதவருகில் நின்று ஒத்துக் கேட்டாள்.

அவன் மெதுவாய்ப் படிகளில் ஏறிக்கொண்டே "ஆ அழகிய கோமளம், உன்வனப்பை யிப்போ பார்ப்போம். பேஷ்......" என்று குடிமயக்கால் சற்று குழறிக்கொண்டே தனக்குத்தானே சொல்லிக்கொண்டு போகிறான்.

கோமளம் சற்றும் தாமதிக்காமல் முற்றத்தைக் கடந்து சென்றாள்.

20-வது அத்தியாயம்.

கோமளம் கோயிலின் ஓரத்தில் நின்று பார்த்தாள். அது கோயிலின் எப்பாகமென்றும் அங்குள்ள பாதைகளும் யாவும் அவளுக்கு நன்ருய்த் தெரியும். அக்கல்லறை கிடங்கு கிடங்குகளாய் மிக்க விசாலமாயிருப்பது, அங்கு பிரம்மாண்டமான தூண்களும், வில் வளைவான பாதைகளு முண்டு. கோயில்களில் இருள் சூழ்ந்திருக்கும் ஆயிரக்கால் மண்டபங்கள் பல சேர்ந்தன போன்றது அந்த இடம். அது பூமியின் கீழ் கட்டப்பட்டிருப்பது. அதற்குள் சென்று ஒளிந்துகொண்டால் மறுநாள் கோயில் திறக்கப் பட்ட பின்பே வெளிசெல்ல முடியும்.

அக்கோயிலின் அழகையும் பெருமையையும் காணத் தினந்தோறும் யாத்திரிகர்கள் அங்கு வருவதுண்டு. அவர்கள் கல்லறைகளின் அதிசய அமைப்பையும் அவசியம் பார்ப்பார்கள். ஆகையால் பகல் முழுதும் எல்லாவழிகளும் திறக்கப்பட்டிருக்கும். எந்நேரமும் ஜனங்கள் கோயிலைவந்து பார்த்தபடியே யிருப்பார்கள். வருகிறவர்களோடு கலந்துகொண்டு வெளியில் சென்ருல் இரவு அங்கு ஒளிந்திருந்த சங்கதி தெரியாமலே வெளியில் போய்விடலாம்.

இவையாவும் கோமளத்திற்குத் தெரியும். குரு மாடி மேல் ஏறுகிறபடியால் கட்டாயம் தான் அடைக்கப்பட்டிருந்த அறைக்குச் செல்வான், அங்கு நடந்திருக்கும் சம்பவங்களையும் தான் வெளியே வந்துவிட்டிருப்பதை அறிந்ததே தன்னைத் தேடப் புறப்படுவான் என்று தெரிந்துகொண்ட கோமளம் துரிதமாய் ஒரு சந்தின்வழியாய் கல்

லறையின் பாகத்திற்குள் நுழைந்து கம்பங்களுக் கிடையி லுள்ள அனேகம் திருப்பங்களில் திரும்பி நெடுந்தூரம் போய்விட்டாள்.

அவள் தேகம் நடுங்கியது. முன்னமே மிக்க திகிலும் துயரமும் அவள் மனதில் குடிகொண்டு வாதிக்கின்றன. அதோடு பூமியின் கீழிருக்கும் இப்பிரம்மாண்டமான கல் லறையில் அந்த இரவில் தான் தனியே யிருப்பதை உணர யாருக்குத்தான் மனம் நடுங்காது. பலதரங்களில் பின்னல் யாரோ வருவதுபோல் தோன்ற உளம் நடுங்கித் திரும்பிப் பார்த்து, சற்று நின்று உற்றுக்கேட்பாள். மறுபடி எல்லாம் நிர்ச்சந்தடியா யிருப்பதை யுணர்ந்து மெதுவாய் நடப்பாள். அவள் நடந்து செல்லும்போது அவள் கையிலுள்ள தீப ஒளியால் கம்பங்களில் நிழல்கள் அசைவதுபோலத் தோன்ற அவற்றைக் கண்டு யாரோ ஒளிந்துகொண்டிருக் கிறார்கள் என மிரண்டு பார்த்து சற்று அங்கேயே நின்று மெதுவாய்க் கொஞ்சம் தைரியமடைந்து மறுபடி நடப் பாள்.

இவ்வாறு நடுங்கிக்கொண்டே போய்க் கடைசியில் மிக்க அலங்காரமாய்ச் சிகரம் அமைக்கப்பட்ட சற்று குட் டையாய்த் தோன்றும் ஒரு பிரம்மாண்டமான கம்பத்தி னடியி லுட்கார்ந்து தீபத்தைக் கீழே வைத்தாள்.

கோமளவல்லி அங்கு உட்கார்ந்ததும் அவளுடைய துயரம் முழுமையும் பொங்கி வெளிகிளம்பத் தொடங்கியது. அவள் சற்றுநேரம் தன் துயரத்தைக் கண்ணீரால் வெளி யிட்டாள். அதன்பின் அவள் மனம் சற்று நிம்மதி யடைந் தது.

அங்கேயே யிருந்தால் காலையில் கோயிலின் எல்லாக் கதவுகளும் திறக்கப்படுமென்றும் அப்போது தப்பித்துக்

கொண்டு போய்விடலாமென்றும் அவளுக்குத் தெரியுமாயினும், ஒரு சமயம் குரு தேடிக்கொண்டு வந்து தன்னைப் பிடித்துக்கொண்டால் என்ன செய்வதென்று ஒரு பக்கம் அதிக திகிலாகவே யிருந்தது. அதிலும் அவன் மேல்மாடிக்கு ஏறிச் செல்லும்போது கூறிய வார்த்தைகளை நினைத்தபோது அவளுக்கு மிக்க திகிலுண்டாய்விட்டது. அப்போதுதான் நமக்கு நாம் இன்னும் நினைக்காத விபரீத தொந்தரவுகள் நமக்கு நேரிடக்கூடும்போ லிருக்கிறதென்று அவள் மனதிற்பட்டது.

அவ்வாறு சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் யாரோ நடந்துவரும் சத்தம் அவள் செவிகளில் கேட்டது. உடனே பயந்து நாற்பக்கங்களிலும் பார்த்தாள். மிக்க கலவரத்தால் பலவித உருவங்கள் எதிரில் வருவதுபோல் தோன்றியது. அவள் கலவரம் அதிகமாய்விட்டது. வருவதும் மறைவதுமாய் அவ்வாறு பல வுருவங்கள் தோன்றியபின் கடைசியில் யாவும் மறைந்து ஒரு கறுப்பு உருவம் எதிரில் நிற்பது போல் தெரிந்தது.

கோமளம் தன் கண்களைமூடிக்கொண்டு "கலவரத்தாலேயே யிந்த வுருவங்களெல்லாம் தோன்றுகின்றன" வென்று தனக்குத் தானே கூறிக்கொண்டாள். பிறகு சற்று நேரங் கழித்துத் தன் கண்களைத் திறந்தாள். எதிரில் சுகானந்தன் என்ற குரு தன் எதிரில் நிற்பதைக் கண்டு கோவென் றலறினாள்.

கோமளம் நடந்துகொண்டது குரு சற்றும் எதிர்பார்க்காத மாதிரி. அதனால் அவனுடைய ஏற்பாடுகளனைத்தும் தலைகீழாய் விட்டன. அவன் கோமளத்தை நோக்கிச் சாந்தத்தோடும் அன்போடும் கூறுபவன்போல்,

"புத்தியில்லாப் பெண்ணே! என்ன முட்டாள் தனமான வேலைசெய்தாய்" என்றான்.

186538

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடை யவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரையென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பின்னை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட், மதராஸ்.